
29

# சிக்மண்ட் ஃப்ராய்டின்

## நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்



# சிக்மண்ட் ஃப்ராய்டின்
## நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்

புலவர் என். வி. கலைமணி எம்.ஏ.,

சாந்தி நிலையம்
புதிய எண். 126, உஸ்மான் சாலை.
தியாகராய நகர், சென்னை-600 017

விலை : ரூ. 20-00

○ ZIGMAND FRAIDIN NAMMAI MEAMPADUTH-THUM ENNANGAL ○ Self Improvement Essays By : PULAVAR N. V. KALAIMANI M.A, ○ First Edition: February 2001 ○ Price : Rs 20.00 ○ Copy Right Holder&Publisher: SHANTHI NILAYAM, New No. 126, Usman Road, T. Nagar, Chennai-600 017. ○ Printed at : Champion Power Printers, 3, Satyanarayana Street, Chennai-600 033. ○

# பதிப்புரை

நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள் என்ற தலைப் பின் கீழ் உலகப் பேரறிஞர்கள் பலரது கருத்துக்களை யும், கண்டுபிடிப்புகளையும் தொகுத்து எங்கள் நிறு வனம் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது

அந்த வரிசையில் தத்துவ விஞ்ஞானி சிக்மண்ட் ஃபிராய்டு அவர்களின் ஆரம்பக் கண்டுபிடிப்புகளை யும், அவர் கற்றுக்கொடுத்த பாடங்களையும்தொகுத்து அளித்துள்ளார் புலவர் என்.வி. கலைமணி அவர்கள். இந்நூலை வெளியிடுவதில் நாங்கள் மிகவும் பெருமிதம் அடைகிறோம். அனைவரும் தவறாமல் படித்து பயன் பெற வேண்டுகிறேம்.

நன்றி.

பதிப்பகத்தார்

## எமது பிற

## நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள் நூல்கள்

டாக்டர் மு.வ.வின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்
பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் ,,
அண்ணல் மகாத்மா காந்தியின் ,,
காமராஜரின் ,,
வி. ராதாகிருஷ்ணனின் ,,
சர் வின்ஸ்டன் சர்ச்சிலின் ,,
ஸ்டாலினின் ,,
டார்வினின் ,,
அறிஞர் அண்ணாவின் ,,
அன்னி பெசன்ட் அம்மையாரின் ,,
கவிஞர் கண்ணதாசனின் ,,
குன்றக்குடி அடிகளாரின் ,,
பெஞ்சமின் ஃபிராங்கிளினின் ,,
அன்னை தெரேசாவின் ,,
நம்நாட்டுத் தலைவர்களின் ,,
நாட்டுக்கு உழைத்த நல்லவர்களின் ,,
இங்கர்சாலின் ,,
அரிஸ்டாட்டிலின் ,,
பிளாட்டோவின் ,,
ரூசோவின் ,,
சாக்ரடீசின் ,,
ஜே. கிருஷ்ணமூர்த்தியின் ,,
ரஸ்ஸலின் ,,
நீட்சேயின் ,,
தந்தை பெரியாரின் ,,
பாரதியின் ,,
கவிக்குயில் சரோஜினியின் ,,
கலீலியோவின் ,,
கன்பூசியஸின் ,,
முத்துலெட்சுமியின் ,,

# சிக்மண்ட் ஃப்ராய்டின்

## நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்

### 1. மனிதனில் மறைந்துள்ள மர்மக்குணங்களைக் கண்டறிந்தவர்!

*மனோதத்துவ மன்னர்!*

*மன இயக்க ஆராய்ச்சிகளின் தந்தை!*

மனிதனின் கனவுகள்; காதல் உறவுகள்; மனிதனின் உள்ளுணர்வுகள்; மன இயக்க ஆய்வுகள் ஆகியனவற்றைப் பற்றிச் சிந்தித்து உலகுக்கு வெளிப்படுத்திய அறிவியல் மாமேதை சிக்மண்ட் ப்ராய்டு!

உலக விஞ்ஞானிகள் அனைவரும், மனிதனின் சூழ் நிலையில் காணப்பட்ட புறப் பொருள்களைத்தான் சிந்தித்து முடிவுகள் கண்டார்கள்!

ஆனால், சிக்மண்ட் ஃப்ராய்டு என்பவர், மனிதனின் மனத்தின் இயல்புகளை, அவனில் மறைந்துள்ள மர்மக் குணங்களை, வாழ்க்கையில் அது அவனை ஆட்டி வைக்கும் தன்மைகளை, ஒரு சமுதாயத்தையே அது மாற்றி அமைக்கும் போக்குகளை; மன விகாரங்களை, மனநோய்களை, மனம் சம்பந்தப்பட்ட விபரீதச் செயல்களை எல்லாம் ஆராய்ந்து அவற்றை உலகுக்கு வெளிப்படுத்தியவர் ஆவார்.

★ மனம் என்பது என்ன? அது மூளையின் ஒரு பகுதியா? அல்லது இதயத்தின் சார்பானதா?

★ மனச்சாட்சி என்பது என்ன? உள்ளத்து உள்ளே உறுத்தும் இந்த உணர்வுக்கு உடலின் ஏதாவது ஓர் உறுப்பு தான் காரணமா? இல்லை, தெய்வீகச் சக்திகள் இதற்கு உண்டா?

★ மனிதன் எதனால் சிந்திக்கிறான்? சிந்திக்கவும், சிந்தித்ததை உணரவும் எப்படி முடிகிறது அவனால்? எந்த உணர்வு அவனுக்குச் சிந்திக்கச் சக்தியைக் கொடுக்கின்றது?

★ சிந்தனை என்பது அவனுள்ளே இருக்கும் ஏதாவது ஓர் உறுப்பா? இல்லை, கண்ணுக்குத் தெரியாத ஓர் ஆவி வடிவமான தெய்வீகசக்தியா? இல்லை, இயற்கை வழங்கிய கொடையா?

★ ஒரு பொருளைச் சிந்திப்பவன், அந்தச் சிந்தனை மயக்கத்திற்கே சரணடைந்து விடுகிறானே. அது ஏன்? என்ன காரணம்? மத சம்பந்தம் ஏதாவது இதற்குஉண்டா அல்லது அந்தராத்மா என்கிறார்களே, அந்த வானவில்லா?

★ சிந்தனை செய்பவனுக்கு அற்புதமான கற்பனைகள் தோன்றுகின்றதே அதெப்படி? இந்தக் கற்பனைகளில் ஏதாவது கடவுள் சக்தி கலந்துள்ளதா? அப்படியானால், சக்தி என்ன? அதற்கு ஆதாரம் ஏதாவது உண்டா?

★ உள்ளுணர்வே இந்த அற்புதக் கற்பனையை உருவாக்கியதா? அல்லது, இவை உருவாவது எப்படி? ஏன் உருவாகின? எதற்காக-உருவாகின?

★ சிலரது சிந்தனைகளில் நிகழ்கால, எதிர்கால அறிவிப்புகள் நடப்பதாக அஞ்சுகிறார்களே-ஏன் அந்த அறிவிப்புகளுக்குப் பிறகு அவை நடந்துள்ளதாகவும் சொல்கிறார்களே-அதன் மர்மம் என்ன?-மாயம் என்ன?

★ பின்னால் நடக்கப் போவதை முன் கூட்டியே அறியும் சக்தி மூளை என்பதற்கு உண்டா? உண்டு என்று கூறினால்; அப்போது மூளை சக்திக்கு கடவுள் சக்தி உண்டா?

★ மனிதனின் மனம் கனவு காண்கிறதே! அந்தக் கனவு எப்படி வருகிறது? ஒருவேளை வெளி உலகத்தில் வாழ்வ தாகக் கூறப்படும் பிசாசுகளா? அல்லது தேவதைகள்தான் கனவை அனுப்புகின்றனவா? எது உண்மை?

மூளைக் கோளாறுகள் மனிதனுக்கு உண்டாவது ஏன்? பைத்தியம் என்கிறார்களே அது என்ன? செயல் இழந்து சிலர் அலைகிறார்களே ஏன்?

சுறுசுறுப்பானர்களாகச் சிலர் நடந்து காட்டி செய்யும் அவரவர் காரியங்களில் வெற்றி காண்கிறார்களே, அதே நேரத்தில் சிலர் சோம்பேறிகளாகவும் மாறி வாழ்க்கை யினையே இழந்து விடுகிறார்களே-ஏன்?

உடலுக்குத் தான் நோய் வருகிறது; அதுபோல, மன துக்கும் வருகிறதா வியாதி? இந்த மனநோயைக் குணப் படுத்த மருந்துகள் உண்டா? இப்படிப்பட்டவர்களுக்கு மீண்டும் வாழ்வு வளமாகுமா? பைத்தியத்தைக் குணப் படுத்த இயலுமா?

அவனைப் பேய்பிடித்துவிட்டது; பிசாசு ஆட்டுகிறது; குட்டிச் சாத்தான், ஏவல் செய்வது என்றெல்லாம் கூறப்படு வது உண்மையா? அல்லது, மனிதனின் உள்மனம் செய்யும் ஏமாற்று வித்தைகளா?

ஆவி உலகம் என்கிறார்களே, ஆவியோடு பேசலாம், பேசுகிறார்கள் என்கிறார்களே, அவையெல்லாம் உண்மை தானா?

மாயஜாலம் செய்வதும், மாந்திரீகம் நடத்துவதும், மை போட்டுப் பார்ப்பதும், அதனால் பேயாட்டம் ஆடுவதும், குறிசொல்வதும், வெற்றிலையிலே மைபூசி, அதோ-இதோ என்று கற்பனை வாதங்கள் பாவலா செய்வதும், அவை நிஜம்தானா? எதனால் அப்படிச் செய்ய முடிகின்றது?

வசியம் செய்வதும், ஆணை மயக்கிக் காட்டுகின்றது? என்பதும், காதல் தோல்விகளால் மோகத்துறைகளில் அதிசயங்கள் நடத்திக் காட்டுகிறேன் என்பதும்-இயற்கைக்கு முரணானவை அல்லவா?

இரவில் மோகினி வருகிறாள்; மோகிக்கிறாள்; ஆண் பெண் இயல் என்பது என்ன? மோகினிகள் துன்பமும், இன்பமும், அவை அலறல்களை இரவிலே எழுப்புவதும் உண்மையா?

என்பனபோன்ற மனவிகாரங்களை, மன அச்சுறுத்தல்களை, மனக் கனவுகளை, மனமாயைகளை ஆராய்ந்து கண்ட ஒரு மனஇயல்துறை மேதைதான் சிக்மண்ட் ஃப்ராய்டு என்ற அதிசய மனிதர்!

இவருக்கு முன்னால், மன இயல்துறையை இப்படி ஆழமாக ஆராய்ச்சி செய்தவர்கள் யாருமே இல்லை; அதனால்தான், இவரை மன இயல்துறை தந்தை என்று உலகம் இன்றும் போற்றுகின்றது.

மன இயல்துறையில், இதுவரை எவரும் கண்டுபிடித்து கூறாத கூறமுடியாத மனஇயல்புகளை-இவர் என்ன அப்படிக் கண்டுபிடித்து விட்டார் என்று கேட்கக் கூடும் அல்லவா? இதோ அவர் கண்டுபிடித்த குண இயல்பு, மர்ம வகைகள்; இவற்றுக்கான விவரங்களை பின்னால் விவரிப்போம்.

★ அப்ரியாக்ஷன் : அதாவது மனஉணர்வைக் கிளறுதல் வேதனை கொடுக்கும் உணர்ச்சிகளைக் கிளறி அவற்றை வெளிப்படுத்துதல்; அதன் மூலம் உண்டான மனநோயை நீக்குதல்.

★ அக்ரோ போபியா : உயர மயக்கம் : மலை போன்ற உயரமான இடங்களில் நிற்கும் பொழுதோ, அங்கே இருந்து அடிவாரக் கீழ்ப்பரப்பைப் பார்க்கும் பொழுதோ, மனிதனுக்குப் பய உணர்ச்சி எழும். அப்போது மயக்கம் வருவது

போன்ற ஓர் அச்சம் பிறக்கும். அதனால், இதயத்துடிப்பு, மூச்சுத் துடிப்பு அதிகமாக அடிக்கும்.

இந்த நோக்கு என்ன காரணம் தெரியுமா? குழந்தைப் பருவத்திலிருந்து, அந்தக் குழந்தை எதையும் எதிரிட்டுப் பார்ப்பதற்கு அஞ்சிய ஓர் அச்ச உணர்ச்சியின் உள்ளுணர்வு உந்திக் கொண்டிருப்பதுதான் காரணமாகும்.

அக்ரெஷன் : அதாவது தாக்குதல் உணர்ச்சி அல்லது பிறரைத் தாக்கும் மன உணர்வுகள் : இந்த உணர்வுகள் மற்ற வர்களை எப்படியெல்லாம் தாக்கிவீழ்த்தலாம்என்பதையே சதா சிந்தனை செய்யும். விரோதிகள் இருக்கும்போது இந்த உணர்வுகள் எழுவது இயற்கை.

ஆனால் எந்த எதிரிகளும் இல்லாத போதும், எந்த ஓர் ஆபத்தும் வராதபோதும், ஒரு மனிதனிடம் இது போன்ற உணர்ச்சிகள் தோன்றுகின்றது என்றால், அது அந்த தாக்குதல் உணர்ச்சி என்ற நோயே ஆகும்!

மனநோய் காரணமாக ஒரு மனிதனிடம் இரண்டு வகைத்தாக்குதல் எண்ணம் எழும். அது பிறரைத் தாக்கும் மனோபாவம், மற்றொன்று, தன்னைத்தானே தாக்கிக் கொள்ளும் மிருகக் குணம் என்பவை!

மற்றவர்களைத் தாக்கும் மனோபாவம் : பிறரைப் பார்த்து எப்போதும் அவதூறாகவும், கிண்டலாகவும், கேலியாக வும், பிறர் மனம் புண்படும்படி பேசுவது.

அதாவது, வெளிப்படையாகவே தகராறுகளை வர வழைத்துக் கொள்வது; சண்டை-சச்சரவுக்கு வேண்டு மென்றே இழுப்பது. நீ மண்ணாகப் போ, நாசமாகப்போ . உருப்படமாட்டாய்; என்று சபித்துப் பேசுவது.

தான் கெட்டாலும் பரவாயில்லை, அடுத்தவன் கெட மாட்டானா? சாக மாட்டானா? என்று எப்போதும் ஏங்கி கொண்டே இருப்பது இந்த எண்ணம் கொலையையும் செய்யத் தூண்டிவிடும்.

தன்னைத்தானே தாக்கிக்கொள்வது ; தனது உடை, தோற்றம் முதலியனவற்றில் அலட்சியம்; பேசும்போதும் நடை உடை பாவனைகளிலும் அக்கறையற்று இருப்பது. படிப்பது, வேலை செய்வது போன்றவற்றில் தோல்வி களைச் சந்திக்கும்போது, தன்னைத்தானே ஓயாமல் வெறுத்துக் கொள்வதும்; அல்லது கண்டித்துக் கொள்வ தும், தானே நோய்வாய் படுவதும், பிறர் அருவருக்கும்படி உடலசைவுகளைச் செய்து கொள்வதும், கார் சைக்கிள் களை ஓட்டும்போது தானே விபத்துக்குள்ளாக்கிக் கொள் வதும், தனக்குச் சாவு வராதா என்று ஏங்கி நினைப்பதும் போன்றவையாகும்!

★ அகோரா போபியா:

திறந்த வெளிகளைக் கண்டால், அடேயப்பா என்ற பய உணர்ச்சி எழுவது. இதுவும், குழந்தையாக உள்ளபோது திறந்த வெளிகளைக் கடக்க முடியாமல் எழுந்த ஓர் உணர்ச்சியின் அறிகுறியே!

★ அம்பிவாலென்ஸ் இதற்கு இருமுகப் போக்கு என்று பெயர். அதாவது, விருப்பு-வெறுப் பு:

ஒருவர் மீது ஒரே நேரத்தில் அன்பும் வெறுப்பும் கலந்த ஒரு வித உணர்வைக் காட்டுவது. இந்த இரு உணர்ச்சி களையும் வெளிப்படையாகக் காட்டாமல்; உள்ளுணர் விலேயே அடக்கிக் கொள்ளும் குணம். குழந்தைகள் சில, தங்களது தாய் தந்தையரிடம் இது போல அடங்கிக் கிடக்க வில்லையா? அதுபோன்ற சுபாவம்!

★ அம்னிஷியா: இதனை மனமறதிநோய் என்று கூறப்படும், தனக்கே வேதனையளிக்கும் உணர்ச்சிகளை மறந்து விடும் மன குணமாகும்.

★ ஆனல் காரெக்டர் : கழிவுணரும் பருவ உணர்வுறுத்தல் என்று இதனைக் கூறுவார்கள்.

குழந்தைப் பருவமாய் இருக்கும்போது தனது கழிவுப் பொருட்களை, அதாவது-மலம், சிறுநீர் பொருட்களை உணரும்பருவத்தில் வளர்ச்சி தடைப்பட்டு, உணர்வுறுத்தல் ஏற்பட்டு விட்டால், அது பின்னாலும் மனிதரின் இயல்பில், பிடிவாதம், பணிவு இல்லாமை, தான் நேசிப்பவரையும் துன்புறுத்தும் மனோபாவம் போன்றவைகள் வெளிப் படலாம்.

கோபம் வந்த குழந்தை, தனது மலத்தையோ, சிறு நீரையோ கைகளால் பிடித்துக் கொண்டு மற்றவரைத் துன்புறுத்துவதற்காக, விடாமல் கத்தும். இதனைப் போலச் சிலர் நடந்து கொள்வார்கள் என்ற குணத்தைக் காட்டும் ஒரு நோயாகும்.

அராஜகம் : அராஜகம் என்றால் உங்களுக்குப் புரியும்! கட்டுக்கு மீறி எதையும் செய்து, கலகம், கலவரம், குழப்பம் போன்றவற்றை உருவாக்கி விடுவது அல்லவா அராஜகம் எங்கு கொண்டு போய் விடுமோ அது யார் கண்டார்?

★ அனிமிசம்: அதாவது ஆன்ம வாதம்! இந்த வாதங்கள் பெரும் பாலான மக்களுக்கு நன்மையே தருகின்ற பண்புகளையே உருவாக்கும். இதனால், சமுதாய மக்களுக்கு எந்தவித ஊறும் ஏற்படாது.

★ அஞ்சும் மனநிலை: இதை ஆங்கிலத்தில் ஆங்க்சிட்டி என்பார்கள். தனக்கோ, அல்லது-தான், அன்புடன் பழகு பவர் களுக்கோ; ஏதாவது அபாயமோ-ஆபத்தோ ஏற்பட்டு விடும் என்பன போன்ற கற்பனை உணர்ச்சிகளால், பயந்து கொண்டே பரபரப்புடன் வாழும் ஒரு குணமாகும்.

★ ஆங்க்சிட்டி நீரோசிஸ்: இது கவலையை ஊட்டும் ஒருவித நரம்பு நோய்க் குணம்.

○ பாலுறு துன்பச்சிக்கல் : இதைக் காஸ்ட்ரேஷன் காம்ப் லக்ஸ் என்பர். ஆணாகப் பிறந்த ஒருவன் தான் ஆணாகப் பிறக்காமல் இருந்தால் நன்றாக இருக்குமே என்று நினைக் கும் குணம்!

அதுபோலவே, பெண்ணானவள், தான் ஒரு பெண்ணாகப் பிறக்காமல் இருந்தால் பரவாயில்லையே என்று நினைக்கும் குணம். இதன் அடையாளம்என்னவென்றால் தன்னிடம் ஆண்மை இல்லையோ என்று பயப்படும் மனோ பாவத்தை ஏற்படுத்தும் இதற்கு என்ன காரணம் தெரியுமா?

இளமைக் காலத்தில் சிறுவர்கள் தாயிடம் அதிக அன்பும், தகப்பனிடத்தில் வெறுப்பும் கொண்டிருந்தால் ஏற்பட்ட உணர்ச்சிதான். இது ஒரு தவறான குணமாகும். இந்தக் குறைபாடு உள்ள ஒரு சிறுவன் தனது நடை, உடை பாவனைகளைப் பார்த்துப் பெண் போல நாம் நடந்து கொள்கிறோம் என்று பிறர் எண்ணிவிடுவார்களோ என்ற பயமே.

எப்படி நடந்து கொண்டால் தன்னை ஆண் என்று நினைப்பார்கள்-என்று எண்ணிதனது நடத்தையைமிகைப் படுத்திக் கொண்டு நடக்கும் ஒருவித குணமாகும்.

○ மின் உணர்ச்சி : இதனை CATHEXIS என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். ஒருவரது மனப்பண்பில் அல்லது குண உணர்ச்சியில், எலெக்ட்ரிக் சக்தி அதாவது மின்சார சக்தி இருப்பது போன்ற ஓர் உணர்ச்சி இருப்பது போலவும், அந்தச்சக்தி அடுத்தவர்களை அதிர்ச்சிக் குள்ளாக்கும் சக்தி என்று நினைத்துக் கொள்ளும் குணமாகும்.

★ மனத்தணிக்கை: இதனை Ego எனும்தன்முனைப்புக்குணம் எனலாம் அதாவது பண்பாட்டுணர்ச்சியாகும். ஒருவனது மனத்துக்குள் அடக்கப்பட்ட உள்ளுணர்ச்சி விவகாரங்கள், பிறருக்குத் தெரியாமல் தடுத்து வைத்துக் கொள்ளும் மனோபாவமாகும்.

★ குறுகல் மயக்கம் : இதனை ஆங்கிலத்தில் CLAUSTRO PHOBIA என்பார்கள். அதாவது, சிறிய சந்து பொந்துகள், சாமான்கள் நிறைந்து கிடக்கும் இடங்கள், மிக உயரமாகத்

தூச்லும் எலிவேட்டர் போன்ற குறுகலான இடங்களைப் பார்த்ததும், பயம் கொள்ளும் உணர்வுகளைக் கொண்ட ஒரு சுபாவம்.

இந்த சுபாவம் கொண்டவன், இதற்கு முன்னால் இப்படிப்பட்ட இடங்களைப் பார்த்தபோது, அதைக் கடக்க முடியாததால் உணர்ச்சியை அடக்கி வைத்ததால், ஏற்பட்ட அச்சத்தின் அறிகுறியே.

★ மனத்தின் தற்காப்பு முறைகள்: இதைச் செய்திட நம்மால் முடியுமா? இதை நாம் செய்வதா? என்ற செயல்களைப் பற்றி மனம் நினைப்பதும் உண்டு! அப்போது நாம் அந்த எண்ணத்தை, அப்படியே அடக்கி விடுகின்றோம். இப்படி அடக்கிக்கொண்ட எண்ணம் மனிதன் தற்காப்புக்கு உட்படுகின்றது.

ஆனால், இதே எண்ணம் மீண்டும் வேறு உருவில் செயல் பாடாக மாறும். இவ்வாறு உள்ளடக்கப்பட்ட வெறுப்பு, மனதின் தற்காப்பால் வெறுக்கப்பட்ட ஆளின் நன்மை தீமைகளில் அளவு கடந்த அக்கறை உடையது போல் நடிக்கும் பாவனையை உருவாக்கும்.

எடுத்துக் காட்டாக, தன்னிடம் எழுந்த காதல் உணர்ச்சியை மனதின் தற்காப்பு அடக்கிவிடும் போது, மற்றவர்களின் காம இச்சைகளைப் பற்றி அளவு கடந்து இகழவும், காதல், புனிதங்களைப் பற்றி வெகுவாகப் பேசவும் வைக்கும் நிலைகளும் ஏற்படும்.

இது போன்ற தன்னை அறியாத ஆசைகள், உடல் நோய்களாகவோ, பிறரை அடக்கி வைக்கும் எண்ணம், சமுதாயத்திற்கு விரோதமாக நடக்கத் தூண்டும் ஓர் எண்ணம், பல விதங்களாக ஏற்படலாம்.

மனதின் தற்காப்புமுறை, மனிதனின் உணர்ச்சிகளை வேறு உருவாகப் பெற்றிடவும் கூடும். எடுத்துக் காட்டாக,

கிரிக்கெட் தனக்கு ஆடவராது என்ற பயம். ஆனால், ஆடு வதால் கெட்டப் பெயர்தான் என்று கூறத்தோன்றும்.

புத்தகம் எழுதும் எழுத்தன், நான் எழுதுவதற்கு ஒன்றுமே இல்லை என்பான்; குஸ்திபோடுபவர்களைக் கண்டால் பயப்படுபவன், குஸ்தி செய்வதால் தனக்கு எந்த பயனும் இல்லை என்பான். இவை எல்லாம் மனிதன் தற்காப்பு முறைகளாகும்!

★ திரிபுணர்வு : அதாவது, விருப்பு மயக்கம் ஆங்கிலத்தில் இதனை DELUSION என்று கூறுவார்கள். இல்லாத ஒன்றைத் தனது விருப்பத்தால் அல்லது பிரமையால் இருப்பதாக எண்ணிக் கொள்வதற்குப் பெயர் திரிபுணர்வாகும்.

தான் காதலிக்கப்பட வேண்டும் என்று விரும்பும் பெண், தன்னை யாராவது பலமாகக் காதலிப்பதாகத் தனக்குத் தானே நினைத்துக் கொள்ளுதல் திரிபுணர்வு மயக்கம்.

பள்ளியில் எந்த மாணவனாலும் கவனிக்கப்படாத ஒரு மாணவன், பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் தன்னைப் பற்றித்தான் அக்கறைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று தனக்குத்தானே நினைத்துக் கொள்வது திரிபுணர்வு அல்லது மயக்க விருப்பு எனப்படும்.

★ கனவுகள் : இதனை DREAMS என்று ஆங்கிலத்தில் கூறுவர்!

கனவுகள் ஆசைகள் காரணமாக வரும்; அச்சம், கவலை, பரபரப்புகள் காரணமாகவும் ஏற்படும்; அதற்காகத் தண்டனைகளை அனுபவிப்பதாகவும் கனவு நிலைகள் உருவாகும்.

★ தன்முனைப்பு : ஆங்கிலத்தில் ஈகோ Ego என்பார்கள். அதாவது, தான் என்னும் மனதின் அகம்பாவ உணர்ச்சி, மனிதன் நாகரிகம் அடையும் காலத்தில் நாகரிக உணர்வின்

அவசியத்தால் உருவான 'பண்பாட்டுணர்ச்சி' உடல் வேட்கைகளுக்கும், சமுதாயக் கட்டுப்பாடுகளுக்கும் இடையில், சமாதானப்படுத்தி வைப்பதுதான் இதன் பணி. அறிவார்ந்த செயல்கள், ஒழுங்கு எனப்படும் சொற்கள், பண்பாட்டுணர்ச்சியின் தன்மையையே அடையாளம் காட்டும்.

★ மனஉறுத்தல்: வளர வேண்டிய ஆரம்பப் பருவத்தில் மனிதன் வளர்ச்சி ஒரு குறிப்பிட்ட விதத்தில் தடைபடுகின்றது. அதனால், அது மன உறுத்தலாக மாறுகின்றது.

எடுத்துக்காட்டாக, குழந்தைப் பருவத்தில் மன வளர்ச்சி தடைபடக்கூடாது. தடைபட்டால் அதற்கு அது மன உறுத்தலாகிவிடும். இக் குழந்தை மனிதனானால், அவனைத் தவிர வேறு எதையுமே அவன் லட்சியம் செய்ய மாட்டான். அவனை அவனே மோகிக்கும் நார்சிசவாதியாகி விடுவான். மனிதனின் பல்வேறு மன வளர்ச்சி நிலைகளிலும் இந்த உறுத்தல் தோன்றக்கூடும்.

★ மனமுறிவு: ஆங்கிலத்தில் இந்த மனக் கசப்பால் உருவாகும் மனமுறிவு குணத்தை FRUST RATION என்பர். அவரவர் ஆசை நிறைவேறாமலும், அதை அடக்கி உயர் வழிப் படுத்தப் படாமலும் மனம் வேதனைப்பட்டுக் கொண்டு உழலும் நிலை!

★ வரம்பு மீறிய தன் முனைப்பு: வரம்பு மீறிய தன் முனைப்பை அதீத தன் முனைப்பு என்றும், Super Ego என்றும் கூறுவார்கள்.

மனசாட்சியின் கட்டளையை நிறைவேற்ற முடியாமல், அல்லது, அதை மீறி நடந்து, ஐயோ தவறு செய்து விட்டோமே என்று நினைக்கும் படியான ஒருவித நினைப்பைத் தான் வரம்பு மீறிய தன் முனைப்பு என்று கூறுகிறார்கள். இந்த மனோபாவம் பலருக்கு சகஜமாக வருவதும் உண்டு.

★ தன்இனமோகம் : தன் பால் உணர்ச்சி அல்லது தன் இனமோகம் அல்லது ஹோமோ செக்சுவாலிட்டி என்று கூறப்படும் குணம் இது.

நான்கு முதல் பன்னிரண்டு பதின்மூன்று வயது வரையுள்ள சிறுவர் சிறுமிகள் தங்களது இனத்துடன் சேர்ந்து விளையாடிப் பழகுவார்கள். எதிர் இனத்துடன் சேர்ந்துப் பழகமாட்டார்கள். இந்தப் பருவத்தில் மனவளர்ச்சி தடைப்பட்டு உறுத்தல் ஏற்படும். அப்படிப்பட்டவர்கள், வாலிபப் பருவத்திலும் எதிர் இனத்தின் மீது விருப்பம் காட்டமாட்டார்கள். ஆணுக்கு-ஆணும், பெண்ணுக்குப்-பெண்ணும் மோகிக்கும் நிலை இது.

★ தானாக மயங்கும் நிலை : இதை ஆங்கிலத்தில் ஹிப்னாய்டு ஸ்டேட் அதாவது, தானாக மயங்கும் நிலை என்பர். அதாவது, இந்த மயக்க நிலை ஹிஸ்டீரியா எனும் நரம்பு நோயால் வருவது. அரைத்தூக்கம், அரை விழிப்புள்ள நிலை பகற்கனவு காண்கிறாயா என்று சிலர் கேட்கிறார்கள் அல்லவா? அது போன்ற ஒரு பிரமை நிலை.

★ ஹிப்னோசிஸ் : இந்த நிலைக்கு அறிவைத் தூயிலுறுத்தல் என்பார்கள் அதாவது, ஒருவரை மயக்கும் நிலை. ஹிப்னாடிசம் செய்பவர்கள் இந்த மயக்கக் குணத்தைச் செய்து காட்டுவார்கள்.

★ மனநோய் : இந்த நோயை ஆங்கிலத்தில் ஹிஸ்டீரியா என்பார்கள் இதை வாதோன்மாதம் அல்லது மூர்ச்சை ரோகம் என்றும்சொல்வார்கள், ஈகோ என்ற தன்முனைப்பு உணர்ச்சிக்கும், 'இட்' என்ற மிருக உணர்ச்சிக்கும் உருவாகும் கடினமான போராட்டம்தான் மனநோய் என்ற ஹிஸ்டீரியா நோய் இந்த நோய் கண்டவர்கள் பக்கவாதம் நோயாலும் தாக்கப்படுவர்.

★ மிருக உணர்ச்சி : இந்த விலங்குணர்ச்சியை ஆங்கிலத்தில் 'இட்' 'ID' என்று கூறுவார்கள். ஆதிகால மக்களுக்கும்

மிருகங்களுக்குள் இடையில் ஏற்பட்ட போராட்ட உணர்ச்சிகளிலே மனிதனுக்கும்-மிருகங்களுக்கும் வெறியுணர்ச்சி, மிருக உணர்ச்சி, போன்ற உணர்ச்சிகள் இருந்திருக்கும் அல்லவா? அந்தக் காட்டு மிராண்டிகள் உணர்ச்சியைத் தான் ஃப்ராய்டு 'இட்' என்கிறார்!

★ தாழ்வு மனப்பான்மை : தன்னைத் தானே அறியாமல் உண்டாகும் ஒரு வித குற்ற உணர்வு இது. இந்த உணர்வு தன்னைத்தானே-தான் தண்டித்துக் கொள்ளும்! அதாவது தனது திறமையை, ஆற்றலை, மரியாதையை, புலமையை, குறைத்தே மதிப்பிட்டுக்கொள்ளும் குணமே INFERIORITY COMPLEX எனப்படும் தாழ்வு மனப்பான்மை.

★ தடை; செயற் குறைபாடு: ஒருவன் செய்ய வேண்டிய செயலைச் செய்ய முடியாதிருத்தல்; எடுத்துக் காட்டாக திக்குவாய்!

திக்குவாய் பேச முடியாததன் குறை, தான் அன்பு காட்டுபவரிடம் தனது காதல் வெளியிட முடியாமல், அதற்கும் துணிவில்லாமல், ஒதுங்கி விடுவது. அதனால், தனது காதலனை நெருங்காமல் இருப்பதுக் காதலின் செயற் குறை அல்லது தடை அல்லவா?

★ உள்ளடங்கிய தன்மை : நான்கு வயது முதல் பன்னிரண்டு வயது வரை உள்ள சிறுவர்கள் தங்கள் இனத்துச் சிறுவர்களிடம் மாத்திரமே கவர்ச்சி உடையவராக இருப்பார்கள். அது போல, சிறுமிகளும் அதே வயது வரை கவர்ச்சியுடையவர் களாக இருக்கும் பருவம் அது. இதனை ஆங்கிலத்தில் LATENCY என்பர்.

★ மாசோக்கிசம் : ஒன்றை மோகிப்பவர்கள் தன்னைத் தானே தண்டித்துக் கொள்ளவும், துன்புறுத்திக் கொள்ளவும் தூண்டிய ஒரு விரக்தி மனோபாவ நில குறிப்பாகக். காதலர்கள் ஒருவருக்கு ஒருவர் துன்பம் அனுபவிக்கும்

மனோநிலை, இதனை ஆங்கிலத்தில் MA SOCHISM என்று கூறுவர்.

★ காம சுய திருப்தி : காமம் கொண்டவர்கள், பருவ விழிப்பில் இயற்கைக்கு முரணான வழிகளில் தங்களுக்குத் தாங்களே காம இச்சையை, சுய திருப்தியோடு தீர்த்துக் கொள்பவர்கள், இதனை ஆங்கிலத்தில் MASTURBATION என்று சொல்வர்.

★ சோக மனோபாவம் : தன்னை உணராத மனப்போராட்டங்களில் எதையாவது பறி கொடுத்தது போல சோகத்துடன் துன்பங்களையடைந்திருக்கும் ஒரு சோகநிலை இதனை ஆங்கிலத்தில் MELANOHOLIA என்று குறிப்பர்.

★ நார்சிசம் : நார்சிசம் என்றால் தன்னைத்தானே மோகிக்கும் தற்காதல் நிலையின் குணம்! அதற்கான உணர்ச்சியும், காதலும் உருவாகும் பருவம்!

குழந்தைப் பருவத்தில் தன்னைத் தவிர, வேறு எதையும் கண்டிராத நிலையில், தன்னைத்தான் காதலிக்கும் மனோபாவம் உருவாகின்றது.

அந்தப் பருவத்தில் மன வளர்ச்சி தடைப்பட்டு, இந்த மனோகுணம் நிலைத்து விடுமானால் பிற்காலத்தில் இவர்கள் தன் மோகிகளாக மாறுவார்கள். தன் மோகிகள் என்றால் புரிகிறதா? ஏற்பட்டு விட்ட மோக உணர்ச்சிகளுக்காக எந்த காமக் கிறுக்கிலும் ஈடுபடுவார்கள். இவர்களே தன் மோகிகள், தனக்குத்தானே மோகிப்பவர்கள்!

★ நரம்பு நோய் : நரம்பு நோய் என்றும், நரம்பு அதிர்ச்சி என்றும் இந்த நோயைக் கூறலாம். அதாவது, குழந்தையாக உள்ளபோது, தான் ஏற்றுக் கொள்ளாத உணர்ச்சிகளை, அடக்கி வைப்பதால் வரும் கோளாறு-இது. இதனால், பலவித நோய்கள் வரும் வாய்ப்புள்ளது! அதற்கு

அடிப்படை இந்த அடக்கி வைக்கும் பழக்கமே! நரம்பு நோய்களுக்கும் காரணம்! இதுவே!

★ உணர்வு அழுத்தம் : அடக்கப்பட்ட உணர்ச்சிகள் மீண்டும் வேறு உருவத்தில் வந்து மனதை துன்புறுத்திக் கொண்டே இருக்கும் குணம்! இதனை ஆங்கிலத்தில் OBSESSION என்று கூறுகிறார்கள்.

★ ஈடிப்பஸ் நிலை : இரண்டு வயது குழந்தை பையனாக இருந்தால் தன் தாயையும், பெண்ணானால் தனது தந்தையையும் அன்புக் குரியவராகத் தேர்ந்தெடுக்கும் குணம்! இந்த மனோபாவமே பின்நாளில் காதலாக மாறுதல் அடைகின்றது. ஆங்கிலம் இதனை OEDIPAS SITUATION என்று பெயரிட்டுள்ளது.

★ ஈடிப்பஸ் காம்ப்ளக்ஸ் : இந்த குணம் அல்லது மனோபாவம் சில நேரங்களில் சிக்கலையும் உருவாக்கிவிடும். எடுத்துக்காட்டாக, ஒரு பையன் தனது தாயினிடத்தில் அன்பு கொண்டபோது, அவனது மனம் வளர்ச்சி அடையாமல், அதுவே மனதில் வேரூன்றி உறுத்தலை ஏற்படுத்துலாம்.

இந்த உறுத்தலின் உள்விளைவு, அவனது தந்தையிடம் விரோதத்தை விளைவிக்கும்; அதனால், மனதில் ஏற்படும் குற்ற உணர்ச்சியை அடக்க நினைக்கும் போது பல விதமான வளர்ச்சிக் கோளாறுகள் உண்டாகும்.

இது போன்ற மன நிலையில் உள்ள ஒருவன் மணம் புரிந்து கொள்வதில் வெறுப்படைவான். அப்படியே அவனுக்குத் திருமணமானாலும் சரியான குடும்ப வாழ்க்கை நடத்த முடியாமல் திணறுவான், திண்டாட்டம் போடுவான்! பலவிதமான மன நோய்களுக்கு ஈடிபஸ் காம்ப்ளெக் OEDIPUS COMPLEXசும் ஒரு காரணமாகும்.

★ ஓரல் காரெக்டர் : உண்பதைத் தவிர வேறுவித உணர்ச்சிகளைத் தெரிந்து கொள்ள முடியாத நிலையில்

முழர்வை தகவல்லது. இந்த பருவத்தில் மன வளர்ச்சி தடைபடக்கூடாது. தடைபட்டு மன உறுத்தலுக்கு ஆளானவர்கள் எப்படி இருப்பார்கள் தெரியுமா?

வாயாடிகள், பெருந்தீனி உண்பவர்களாகவே இருப்பார்கள். இவர்களுக்கு வாயால் செய்யும் காரியங்களிலேயே அதிகமான விருப்பமும் ஆசையும் இருக்கும். இதனை ஆங்கிலத்தில் ORAL CHARACTER என்று கூறுவார்கள்.

★ வேற்றுருவில் வெளியாதல்: வெளிப்படுவங்களில் நடைபெறும் அகக் காட்சிகள், மனத்தின் அடக்கப்பட்ட உணர்ச்சியானது வேறு உருவத்தில் வெளியாகலாம்!

ஒரு பெண், தன்னைக் காதலிக்காத ஒருவனைக் காதலிக்கும் போது, அவனை, அவள் வெறுப்பதாகவும், அவன் தன்மேல் கெட்ட நோக்கம் உடையவனாக இருப்பதாகவும் சொல்வாள்!

தனது தாயிடமோ-மேலும், அதிகமான அன்பு வைத்திருக்கும் வாலிபன் ஒருவன், தான் சந்திக்கும் பெண்களிடம் தனது தாய்மைப் பண்புகளை இணைத்துப்பார்த்து தாயைப்போலவே நடந்து கொள்வான்!

★ உள்ளப்பகுப்பு: மனோ தத்துவ சோதனை, ஆத்ம ஆய்வு, நரம்புகள், மனம் சம்பந்தப்பட்ட வியாதிகளைச் சுகப்படுத்த, ஃப்ராய்டு கண்டு பிடித்த முறை.

நோய்க்குக் காரணமாக, மனத்துள் அடக்கப்பட்ட உணர்ச்சியை சொற்களாக வெளி வரச்செய்தார். இதனால் மனம் தூய்மை அடைகிறது என்கிறார். தனது உணர்ச்சிகளை உலக நடைமுறைக்குச் சரி கட்டிக் கொண்டு இயல்பான வாழ்க்கை நடத்த முடிகின்றது. இந்த PSHY-CHO ANALYSIS பற்றி ப்ராய்டு கூறும் விவரங்கள் உள்ளத்தைப் புல்லரிக்கச் செய்கிறது. இதற்கான ஒரு மனநோய் பேணகம் அதாவது காப்பகம் இருப்பதும் நலம் என்கிறது ப்ராய்டு ஆய்வு.

★ துன்பத்துள் இன்பம் : துன்பத்துள் இன்பம் காணுவதைத் ஃப்ராய்டு (SADISM) சாடிசம் என்கிறார். வருத்தும் தொடு மோகிகளின் ஒறுப்பு மனோபாவமே சாடிசம். காதலிக்கும் ஒருத்தியை, அல்லது ஒருவனைத் துன்புறுத்துவதில் காணும் இன்பமே சாடிசமாகும்.

★ உயர்வழிப்படுத்துதல் : விரும்பக் கூடாத ஓர் ஆசையை, வேறு உருவத்தில் வழிகாற்றுவது. அதனால், அந்த ஆசையை உயர்வுபடுத்துவது.

எடுத்துக்காட்டாக, தகாத ஒரு காம இச்சையை அல்லது மோக ஆசையை, இச்சைக்காகத் துடிக்கும் சக்தியை, கலை அல்லது பக்தியில் ஈடு படுத்தி உயர்வழிப் படுத்துவதாகும். இது மிருக உணர்ச்சியின் ஆவேசமாகும். இப்படி உயர்வழிப்படுத்து வதால் தான், கலையும், அறிவியல் வளர்ச்சிகளும் உருவாகுகின்றன என்பது சிக்மண்ட் ப்ராய்டின் மகத்தான முடிவாகும்.

★ தீவிர தன் முனைப்பு : மனச்சாட்சி ஈகோ எனும் தன் முனைப்பு அல்லது பண்பாட்டுணர்ச்சியின் ஒரு பாகம் மனிதனின் நடத்தையைச் சீர்தூக்கிப் பார்க்கும் நீதிபதி போலிருந்து பணியாற்றுகின்றது. சூப்பர் ஈகோ அல்லது தீவிர தன் முனைப்பு என்றும் கூறலாம். இது மன சாட்சியே!

★ நனவிலி : இந்த மனோபாவம், உள்மனம், உணர்ச்சி, ஆசை நினைவு போன்ற வற்றில் மனிதனுக்கே தெரியாமல், புரியாமல் இயங்கும் ஓர் உள்மனக் கூறுபாடே!

மேற்கண்டவாறு, சிக்மண்ட் ப்ராய்டு மனிதனிடம் ஒழுக்கமாயுள்ள, மறைந்துள்ள, மர்மக்குண நலன்களை-மன இயல்புத் துறையில் ஆய்வு செய்து, நமக்கு விளக்கிய அற்புத மேதையாக அவர் திகழ்ந்துள்ளார்.

## 2. மகாபாரதம் அரவான் போல, ஃப்ராய்டு பிறந்தார்!

இந்திய இதிகாசங்கள் இரண்டனுள் ஒன்று மகா பாரதம் என்ற நூல்! அதில், காண்டீப வித்தைகளில் நிகரற்ற மாவீரன் விஜயன் எனப்படும் அருச்சுனன்!

அந்த அரிச்சுனனுக்கும், நாககன்னிகை என்பவளுக்கும் பிறந்தவன் அரவான் என்ற தன்னிகரிலாப் பெருவீரன்! அவனைப் பாரதப் போருக்காக முதல் பலி, களபலி கொடுத்து விட்டார்கள் சூதர்கள்!

அவன் மட்டும் முதல் பலியாகாமல் இருந்திருப்பானே யானால், பதினெட்டு நாட்கள் நடந்த பாரத யுத்தத்தை-ஒரே நாளில் முடித்து வெற்றி வீரனாகப் பவனி வந்திருப் பான்! என்று பாரதச் சொற்பொழிவாளர்கள், புலவர் கிரனைப் போன்றவர்கள் கூறுவார்கள்!

அரவானுக்கு மட்டும் அவ்வளவு வீரம் ஏன் இருந்தது? என்று கேட்பவர் களுக்கு இதோ பதில்: 'அரவான் பிறக்கும் போது எதிர் ரோமத்துடன் பிறந்தானாம்; எதிர் ரோமத் துடன் பிறக்கும் எந்தக் குழந்தையும், உலகத்தில் எவருமே செய்ய முடியாத செயற்கரிய செயல்களைச் செய்து காட்டிப் பெறற்கரியப் பேறுகளைப் பெறுவர் என்பது புராண வழக்கு!

இந்த இதிகாச வழக்குக்கு ஈடாக, சான்றாக, மனித உருவத்திலே குழந்தையாக, எதிர் ரோமத்துடன் பிறந்த வர் சிக்மண்ட் ஃப்ராய்டு என்ற மனவியல் ஞானி.

அதனால் தான் ஃப்ராய்டு, அவர் பிறப்பதற்கு முன்பு எவருமே செய்யாத ஒரு செயற்கரிய செயலான மனித மனத்தின் இயல்புகளை, குண நலன்களை, மனோ பாவங் களை, அக்குவேறு ஆணி வேறாக-அலசி ஆய்ந்து உலகுக்குப் பல உண்மைகளை உணர்த்தினார்! அவர் சிந்தனை எல் லாம் கண்டு விஞ்ஞான உலகமே வியந்தது; பிர மித்தது.

சிக்மண்ட் ஃப்ராய்டு என்ற மனிதவியல் ஞானி, ஐரோப்பாவிலே செக்கோஸ்லாவாகியா என்ற நாட்டி லுள்ள 'வ்ரீபரிக்' என்ற ஓர் ஊரில் 6.5. 1856-ம் ஆண்டில் பிறந்தார்.

பிறந்த சிசுவைத் தூக்கித் தனது கவானில், அதாவது இருகால்கள் இடையே உள்ள தொடைப் பகுதியில் போட்டுப் பார்த்த மருத்துவத்தாய், பிரசவமான குழந்தை யின் பெயரை அழைத்து, ''அமாலியா! உனது குழந்தை பெரும் பாக்கியவானாக இருப்பான், உடம்பில் எதிர் ரோமத்துடன் பிறந்துள்ளன; எதிர்காலத்தில் பெயரும் புகழுமாக விளங்குவான்'' என்றாள்!

பெற்ற தாய் அதற்குச் சிறுஞ் சிரிப்பு சிரித்தாள்; ஈன்ற பொழுது பெரிதுவக்கும் மகனாக, சான்றோனாக, பேறானனாக விளங்குவான் தனது பிள்ளை என்கிற போது எந்த தாய்தான் மகிழாமல் இருப்பாள்?

அமாலியா யூதா குலத்தைச் சேர்ந்தவள்; அவளது கணவனும் யூதன்தான்! அக்காலத்தில் யூதர்கள் என்றாலே மிகவும் இளக்காரமாக எண்ணப்பட்டவர்கள்! அவர்கள் வாழ நாடு என்று ஒன்றில்லாத இனம் என்று பழிக்கப் பட்டவர்களாக இருந்தார்கள்!

அதனால் தான், இட்லர் என்ற இனவெறியன், மல லட்சம் யூதர்களைக் கொன்றொழித்தான்! அவன் யூத இனத்தின் பரமவிரோதி! தனது நாஜிப் படைகளுக்கும் அதே வெறியை ஊட்டி அவர்கள் மூலமாகவும் அந்த இனத்தை அழித்து வரலானான்! அவனை அடியோடு காலம் அழித்தது!

இத்தகைய ஓர் இனத்திலேதான், இந்த ப்ராய்டு என்ற ஞானக் குழந்தையும் பிறந்தது. அமாலியா என்ற ப்ராய்டின் தாய், ஜேகப் ஃப்ராய்டு என்ற தனது கணவனுக்கு இரண்டாம் தரம் மனைவி. மூத்த மனைவியை அவர் இழந்துவிட்டதால், ஃப்ராய்டின்

தாயாரை ஜேகப் மறுமணம் செய்து கொண்டார், அவருடைய முதல் மனைவிக்கு இமானுவேல் என்ற மகன் ஒருவன் திருமணமாகி மனைவியுடன் வாழ்ந்துக் கொண்டிருந்தான்.

ஃப்ராய்டு என்பது தந்தையின் குடும்ப வம்சத்து வழி வந்த பெயர். சிக்மண்ட் என்பது ஃப்ராய்டு தாயார் அமாலியா அவருக்குச் சூட்டிய நாமம். அதனால், அவரை, சிக்மண்ட் ஃப்ராய்டு என்று முழுப் பெயரையே அழைத் தாலும், நாளடைவில் தந்தை வழி குடும்பப் பெயரான ஃப்ராய்டு என்பதுதான், நிலைத்தது.

குழந்தை ஃப்ராய்டுக்கு, அவனுடைய அண்ணன் இமானுவேலுவின் மக்களான ஜானும், பாலைனும் விளையாடும் நேர நண்பர்களைப் போலவே பழகினார்கள்.

ஃப்ராய்டுக்குப் பிறகு அமாலியா ஐந்துபெண் குழந்தை களைப் பெற்றாள்! மொத்தம் உடன் பிறந்த ஆறு பேர் களுடன் அவர் பழகினாலும், வளர்ந்தாலும், எல்லாரையும் விட ஃப்ராய்டுதான், நுண் அறிவும், வீரிய செய லாற்றலும், கொண்டவராக விளங்கினார்.

ஜேகப் சொந்தமாகச் செய்து வந்த சிறுதொழில் நலிவு கண்டது; அதனால் வறுமை அவரை வாட்டியது. வேறு எங்காவது பிழைக்கலாம் என்று அவர் திட்ட மிட்டார்.

இமானுவேல், தனது மனைவியுடனும் மக்களுடனும் இங்கிலாந்திலே உள்ள பஞ்சாலை நகரமான மான் செஸ்டர் நகருக்குச் சென்றார். ஜேகப், யூதர்கள்சுயேச்சை யாக வாழும் நாடான ஆஸ்திரியா நோக்கிப் பயண மானார். வியன்னா நகரம் வந்து கம்பளம் துணிகளை வணிகம் செய்து வளமாக வாழ்ந்து வந்தார்.

பத்து வயதானது; ஃப்ராய்டு உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து படித்தார்! அமாலியாவுக்கு அங்கும் ஓர் ஆண்

குழந்தை பிறந்தது. இப்போது ஃப்ராய்டுவுக்கு உடன் பிறந்தார் ஏழு பேர்களானார்கள்.

உலக சிந்தனையாளர்கள் நூற்களை எல்லாம் படித் தான் சிறுவன் ஃப்ராய்டு. டார்வின், மெந்தல், பாஸ்டியர், போன்ற தத்துவஞானிகளைப் பற்றி அவர் பேசும்போது, தகப்பனார் ஜேகப்புக்கு ஒரே ஆச்சரியம்தான் எழும்! தாய் பிரமித்து நிற்பாள்!

பதினேழாம் வயதில் சிறுவன் ஃப்ராய்டு ஜிம்னாசி யத்தில் பட்டம் பெற்றான். இதே நேரத்தில் தத்துவமா? அறிவியலா? கணிதமா? இலக்கியமா? கவிதையா? வாழ்வியல் பழம் பெரும் நூல்களா? எல்லாவற்றிலும் அவர் வித்தகரானார்!

வியன்னா பல்கலைக்கழகத்தில் நடந்த ஒரு சொற் பொழிவை அவர் கேட்டார். அந்தப் பேச்சாளர் பேசும் போது, 'உலகின் ரகசியங்கள் எல்லாம் இயற்கையில்தான் அடங்கி இருக்கின்றன. இயற்கையின் இரகசியங்களை உணர்வதுதான் அறிவின் வேலை." என்று குறிப்பிட்டார்.

இந்தப் பேச்சைக் கேட்டதற்குப் பிறகு, ஃப்ராய்டுக்கு விஞ்ஞானம் படிக்க ஆர்வம் ஏற்பட்டது. இறுதியாக மருத்துவப் பிரிவில், நரம்புகள் சம்பந்தமான ஆராய்ச்சியில், பேராசிரியர் எர்னஸ்ட் ப்ரக்" என்பவருடன் தொடர்பு கொண்டு ஈடுபட்டார்.

ஒரு நாள் ஃப்ராய்டு நடந்து போய்க் கொண்டிருந்த போது, திடீர் என்று தலைச்சுற்றல், மயக்கம், மேல் மூச்சு வாங்கல், மார்பு வேகமாகப் படபடப்பு போன்றவை ஏற்பட்டது: மிகக் கஷ்டப்பட்டு அவர் நடந்து எதிரிலுள்ள சுவரைப் பிடித்துக் கொண்டு நின்றார்.

இந்த மயக்கம் அவருக்கு இதற்கு முன்பு இரண்டு மூன்று முறைகள் வந்துள்ளன. ஆனால், இதற்கு என்ன காரணம்? நோய் நொடி ஏதுமில்லை; உடற்கோளாறு ஒன்றுமில்லை; பிறகு ஏன் உடல் சம்பந்தமான இந்த அறிகுறிகள்?

இவ்வாறு ஃப்ராய்டு தனது உடலைத் தானே சோதித்துப் பார்த்தார். உடலைக் கூறுபோடும் மருத்துவக் கலையை விட, நரம்பு சம்பந்தமான ஆராய்ச்சியிலே அவர் அதிகக் கவனம் செலுத்தினார்.

டாக்டர் ஹான்சன் என்பவர், ஒரு மனிதனை ஹிப்னாடிசம் செய்து, மயக்கம் உண்டாக்குவதைப் ப்ராய்டு பார்த்தார். அந்த மனிதனின் உடலில் மாற்றம் உண்டாவதையும் அவர் கவனித்தார். இதயத் துடிப்பும், மூச்சு விடும் வேகமும் மாறுதல் அடைந்தன.

ஹிப்னாடிசம் என்ற மயக்குக் கலையைச் செய்பவர், வாயால் சொன்னவுடன், மற்றவன் உடலில் மாறுதல் உண்டாக அவசியம் என்ன?

அப்படியானால், மனிதனுடைய நரம்பு அமைபபுகளும் உடலில் ஏற்பட்ட மாறுபாட்டிற்கும் ஏதோ தொடர்பு இருந்தாக வேண்டும் என்று ஃப்ராய்டு சிந்தித்தார்.

தவளைகள், மீன்கள், பறவைகள் முதலியவற்றின் நரம்பமைப்பு ரகசியங்களையும் ஆராய்ந்தார். இந்த ஆராய்சிதான் பின்னால் அவருக்கு மனித உடலமைப்புகளின் ரகசியங்களை அறிவதற்குப் பயன்பட்டது.

நரம்பு அமைப்புத் தொடர்புகளைப் பற்றி அவர் பேசிய பேச்சு, எழுதிய ஆய்வு, உழைத்த உழைப்பு அனைத்தையும் கண்ட மற்ற விஞ்ஞானிகள், பேராசிரியர் ப்ரக்குக்கு உதவியாளராகப் ப்ராய்டுதான் நியமிக்கப் படுவார் என்று பல்கலைக் கழகமே நம்பியது.

இந்த நேரத்தில் ப்ராய்டுவின் தங்கை அன்னாவுக்கும்-எலிபெர்னேஸ் என்ற யூத வாலிபனுக்கும் திருமணம் உறுதி செய்யப் பட்டது. அந்த யூதனுக்கு இரு சகோதரிகள் ஒருந்தி மின்னா, மற்றவள் மார்த்தா! இந்த மார்த்தாவின் அழகு, தோற்றம், பேச்சு, நடையுடை பாவனை, பழக்க வழக்க நயம் அனைத்தும் ஃப்ராய்டுக்குப் பிடித்து விட்ட தால் அவளைத் திருமணம் புரிய எண்ணினார்!

வியன்னா பல்கலைக் கழகத்து உதவி பேராசிரியர் பணி கிடைத்ததும் மார்த்தாவை மணம் செய்து கொள்ளலாம் என்று திட்ட மிட்டார் ஃப்ராய்டு! ஆனால், யூதன் என்ப தால் அந்த வேலை அவருக்குக் கிடைக்காமல் போகவே-தனது திருமணத்தைத் தள்ளிப் போட்டபடியே ஆராய்ச்சி யில் கவனம் செலுத்தினார். பெற்றோர் தங்கையின் திருமணத்தை மட்டும் நடத்தினார்கள்.

பேராசிரியர் ப்ரக்கிடம், ப்ராய்டு கற்றக் கல்வியானது, நரம்பு சம்பந்தமான நோய்களை மிகக்கூரிமையாக அறிந்து ணரும் வாய்ப்பாக இருந்தது. அதே நேரத்தில், ஒரு நோயின் சாதாரண அறிகுறிகளில் இருந்தே மிகத்திறமை யாக அது என்ன வகையான நோய் என்று கண்டு பிடித்துக் கூற முடியும் என்ற புகழ் அவருக்கு உருவானது. இதிலிருந்து அவர் ஓர் ஆய்வு அறிஞரானார்!

எடுத்துக் காட்டாக; மரணப் படுக்கையில் ஒருவன் கிடந்தான்; அவனது உடலை சோதித்துக் கூறிட டாக்டர் களால் முடியவில்லை. நோயாளியின் பல் ஈறுகளிலே தொட்டால் ரத்தம் வந்தது.

இந்த நோயாளியை ஃப்ராய்டு சோதித்தார். நோயாளிக்குச் சரியான உணவு இல்லாததால் உடல் தசை இழைகள் எல்லாம் வலுவிழந்து விட்டன. இதற்கு அடையாளமாக அவனது மூளை அறைப் பிரிவுகளிலே ரத்தம் கசிந்திருக்கும். அதனால் இந்த நோய் ஸ்கர்வி என்றும், அதாவது, Scorbutic Cerebral Hemorrhage கேஸ் என்றார்.

அக்காலத்தில் அது போன்ற நோய்க்கு மருந்தே கிடையாது; அதனால் அவர் கூறியதை மற்ற டாக்டர்கள் நம்பவில்லை பிறகு அந்த நோயாளி மாண்டான்! அவனுக்கு உடல் பரிசோதனை நடந்தது! மண்டை மூளையை ஆராய்ந்தபோது, ஃப்ராய்டு கூறியபடியே அது உண்மை யாக இருந்தது.

ரொட்டி மாவு பிசைவும் ஒரு பலமுள்ள திடகாத்திர மான தொழிலாளி மருத்துவ மனைக்கு கொண்டு வரப் பட்டபோது, அவன் 'அய்யோ, அப்பா, என்று அலறிய படியே சப்தம் போட்டான். அவனுடைய நோய் என்ன என்பதை எந்த டாக்டராலும் கண்டுணர முடியவில்லை.

இந்த நோயாளியை ஃப்ராய்டு பார்த்து, 'அவனது உடல் நரம்புகள் எல்லாம் எரிவு கண்டு வீங்கி விட்டன' என்றார். அதை, Acute Polyneuritis, an inflamation of all the nerves in the body, என்று மருத்துவ மொழி யிலே கூறியதை, எந்த டாக்டரும் ஒப்ப மறுத்தனர்.

அந்த நோயாளி பிறகு மரணம் அடைந்தான்! பிரேதப் பரிசோதனையும் நடந்தது! ஃப்ராய்டு என்ன கூறினாரோ அந்த நோய் அப்படியே இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

ஃப்ராய்டின் இந்த இரு திறமைகளை நெஞ்சார, கண்ணாரக் கண்ட மருத்துவமனை நிபுணர்கள், மற்ற டாக்டர்களுக்கு மருத்துவ வகுப்புப் போதனைகளை நடத்தும்படியாக அவரை நியமித்தார்கள்.

## 3. ஆண்களுக்கு ஹிஸ்டீரியாவா? பைத்தியக்காரன் ஃப்ராய்டு!

மருத்துவமனைக்கு வந்த நோயாளிகளை எல்லாம் நுணுக்கமாக அவர் ஆய்ந்தார். உடல் சம்பந்தமாகக் கோளாறு இல்லாமல், இயற்கைக்கு மாறான நோய்க் குறிகளை உடையவர்களை ஆழமாக ஊன்றிக் கவனித்துச் சோதித்தார், ஃப்ராய்டு!

இந்த மாதிரி நோய்களுக்கு ஹிஸ்டீரியா" Hysteria மன நோய், அல்லது வாதோன் மாதம், அல்லது மூர்ச்சை நோய் என்ற பெயர்கள் அப்போது வழங்கி வந்தன.

மனிதனின் நினைப்புகளால் இந்த நோய் உண்டாகிறது. உடல் கோளாறால் இது உருவாவதில்லை என்ற எண்ணம் அப்போது உலவி வந்ததால், இவ்வாறு வரும் நோயாளிகளுக்கு பொதுவாக ஒரே வகையான மருந்து மிக்சரைக் கொடுத்து அனுப்புவது வழக்கம். குடிப்பதற்கு அந்த மருந்து மிக்சர், காரமும் இனிப்புமாக இருக்குமே தவிர, வேறு மாறுதலேதும் ஏற்படாது.

கை கால் செயலற்று வீழ்ந்து போவது, உடலுறுப்புகள் எதிர்பாராமல் படபடப்பது, பிரமை ஏற்பட்டு அப்படியே மரம்போல நின்று, விடுவது, தலை சுற்றுவது, மயக்கம் வருவது மேல் மூச்சு வாங்குவது, இவற்றால், பார்வை, ருசி, நாற்றம், வாசனை, ஒலி, ஸ்பரிசம் ஆகிய ஐம்புலன் உணர்ச்சிகள் தெரியாமல் போய் விடுகின்றன.

இது போன்ற பலவகையான நோய்கள் எல்லாம், உடலில் எந்தவிதக் கோளாறுகளும் இல்லாமல் ஏற்படுமானால், அதற்குக் காரணம் ஏதாவது இருக்க வேண்டாமா? எப்படி இந்த நோய்கள் வரும் எவ்விதக் காரணமும் இல்லாமல்? ஃப்ராய்டு இவற்றை எல்லா சிந்தித்தார்!

நோயாளிகள் கை கால்கள் இழுத்துக் கொள்வ; தலைக்கனம், மார்புத்துடிப்புகள் பற்றி அவர்கள் கூறியனவற்றை எல்லாம் கவனமாகக் கேட்டு ஆராய்ந்தார்!

உண்மையான நோயாளிகள் துன்பப்படுகிறார்களோ இவர்களுடைய நோயின் காரணங்களோ, அதன் விசித்திர குணங்களோ புரியவில்லையே என்ற உணர்ச்சிதான் ஃப்ராய்டுக்கு ஏற்பட்டது.

இந்த நோய்கள் எவ்வாறு மர்பமாக இருக்கின்றனவே என்று அவர் ஆராய்ச்சி செய்வதிலேயே இரவும்-பகலும் ஈடுபட்டார். மூளைப் பகுதிகளைத் தனித்தனியாகவும், பிரித்தும் ஆய்வுபுரிந்தால், இந்த நோய்களுக்குக் காரண மான சிறிய தசைப் பகுதியை, மூளை அறையை, (Brain Cell) சுரப்பியைக் (grand) கண்டுபிடிக்க முடியும் என்ற முடிவுக்கு வந்தார்.

பேரறிஞர் ப்ரோகா என்பவர், சுவை, ஊறு, நாற்றம், செவி, கண் என்ற ஐம்புலன் உணர்ச்சிகளை உணரும் பகுதி கள் மூளையிலே தனித்தனியாக இருக்கின்றன. என்றும்

பலமொழிகள் ஒருவனுக்குத் தெரியும் என்றால், அந்த மொழிகள் ஒவ்வொன்றையும் அவன் மூளையிலுள்ள தனித்தனிப் பகுதி உணர்ந்து, நினைவு வைத்துக் கொள் கிறது என்றும் கண்டுபிடித்தார்.

அதுபோலவே, நரம்பு நோய்களுக்குக் காரணமான ஏதாவது மூளையில் இருக்க வேண்டும் என்றும், அதைக் கண்டு பிடித்து வெளியிட வேண்டும் என்று ஃப்ராய்டும் முனைந்து செயல் பட்டார்.

ஆனால், மூளையில் அத்தகைய ஒரு பகுதி எதுவும் காணப்படவில்லை, மன நோய்களான 'ஹிஸ்டீரியா' HYSTERIA மூளையின் சிறிய அறைகளுக்கு ஏற்பட்ட தீமைகளால் அல்லது நோயால் ஏற்படவும் இல்லை என்று ஃப்ராய்டு கண்டார்.

ஆனால், இந்த நோய்கள் வரக் காரணங்கள் என்ன? காரணம் இல்லாமலே நோய் வருமா? எந்த ஒரு நிகழ்ச்சிக் கும் அடிப்படைக் காரணம் இருக்க வேண்டுமே; உடலின் உபாதைகள், துன்பங்கள், காரணம் இல்லாமல் எப்படி ஏற்படும்?

இந்த நேரத்தில்; பாரீஸ் நகரில் பெரும் புகழுமாக இருந்த ஹிஸ்டீரியா நோய்களின் டாக்டர் ஜீன் மார்ட்டின் சார்கர்ட் என்பவரைப் பற்றி ஃப்ராய்டு அறிந்திருந்தார்.

நரம்பு நோய் பற்றி நீண்ட நாட்கள் ஆராய்ச்சி செய்தது. இந்த சார்கட். பின்னால் பல்வேறு முறைகளாலும் மனிதர்களுக்கு நரம்பு நோய் அல்லாத மனநோய் அறிகுறிகளை உண்டாக்க முடியும் என்பதை நிரூபித்தார். உலகெங்கும் உள்ள மாணவர்கள் இந்த சோதனையைத் திரண்டு வந்து கண்டனர்.

பாவம் மார்த்தா. அவ்வாறாக நான்கு ஆண்டுகள் காத்திருந்தும் ப்ராய்டு திருமணம் மீண்டும் தள்ளிப்போடப் பட்டது.

1885-ம் ஆண்டு அவர் பாரிஸ் நகருக்குப் புறப்பட்டார். சார்காட், ஆரம்ப காலத்தில் நரம்புகளுக்கு ஏற்படும் நோய்களை மட்டுமே கண்டுபிடித்து மருத்துவம் செய்து வந்தார். இப்போது, நரம்புகளில் நோய் இல்லாவிட்டாலும், நரம்புநோயின் அறிகுறிகளோடு நோயாளிகள் இருப்பதையும் அவர் கண்டுபிடித்தார். இதற்குக் காரணம் மனநோய்தான் என்பதை விளக்கினார்.

பக்கவாதநோய் அதாவது பாராலிசிஸ் என்பது நரம்பு சம்பந்தமான ஒரு நோய். அதனால் ஒரு பக்க உறுப்புக்களை மனிதன் இழந்து விடுகின்றான். உடம்பின் வலப்பக்கமோ, இடப்பக்கமோ கைகால்கள் இயங்காது.

இந்த நோய் மூளையில் அப்பகுதிகளை இயக்கும் நரம்பு முடிச்சில் அதிர்ச்சி ஏற்பட்டு, அது செயல் இழந்து போய்விடுவதால் உண்டாகின்றது.

மரணமடைந்த பக்கவாத நோயாளனின் பிரேதத்தைப் பரிசோதித்தால், மூளையிலுள்ள நரம்பு முடிச்சில் ரத்தம் கசிந்து உறைந்து போயுள்ளதைப் பார்க்கலாம்.

ஆனால், இந்த மாதிரியான விளைவுகள் ஏதும் ஏற்படாமலே, மூளையில் நரம்பு பாகம் சரியாக இருந்தும்-சிலர் பக்கவாத நோயால் தாக்கப்படுகிறார்களே -அது எப்படி?

இதேபோல, கண், காது, மூக்கு, வாய், தோல் ஆகிய புலன் உறுப்புக்கள் செயலற்றுப்போவது முதல், எல்லாவிதமான நரம்பு நோய்களும்-இயற்கையாக ஏற்பட்ட உடல் கோளாறுகளின்றி, ஆச்சரியமாக-எப்படியோ மனிதருக்கு ஏற்படலாம்.

மயக்கம், பேச்சு மறந்து போதல், அல்லது திக்குவாய் போல திணறித் திக்குதல், திடீர் என்று பழைய நினைவுகளை எல்லாம் மறந்துபோதல், இவை போன்ற பிற நோய்களும் உள்ளன!

ஹிஸ்டீரியா என்ப்படும் மனநோய்கள் பெண்களுக்குத் தான் வரும் என்று நம்பப்பட்டன! அவர்களுக்குள்ளே கர்ப்பப்பை கோளாறுகள்தான், இது போன்ற நோய்களுக்குக் காரணம் என்று மருத்துவர்களால் கூறப்பட்டது.

ஆனால் இந்த மாதிரி நோய்கள் பெண்களுக்கு மட்டுமே அல்ல; ஆண்களுக்கும் வரலாம். இதற்குக் காரணம் கர்ப்பாசயக் கோளாறு மட்டும்தான் என்பதல்ல என்று சார்காட் மறுத்தார்! மறுத்தது மட்டுமன்று, நிரூபித்தும் காட்டினார்.

மனிதனின் பாதிக்கப்பட்ட உறுப்புக்களை இயக்கும் பாகம் மூளையிலே உள்ளது அல்லவா? அதற்குப் பாதகம் விளையாமலும், இந்த நோயின் அறிகுறிகளை உண்மையான நோயாளிகளைப் பார்த்துப் அப்படியே எதிரொலிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாரலிசஸ் நோய் வந்த நோயாளியின் உடலில் மூளைப் பகுதியில் இருந்து தொலைவிலுள்ள நோயால் அதிகமாகப் பாதகம் அடைந்திருக்கும்.

ஒரு கால், இயங்கவில்லை என்றால் அந்தக் காலின் விரல்கள் உணர்ச்சியே இல்லாமல் மரத்துண்டுகளைப்போல இருக்கும்.

விரலிலிருந்து மேலேவரவர நோய்குறைந்து இடுப்புக்கு வரும்போது நோயின் தன்மைமிகவும் தணிந்து விடுவதால், இடுப்பிலுள்ள தசை பாகங்களை அவனால் இயக்க முடியும் இதனால், உண்மையான பக்கவாத நோய் உள்ளவன், நோயடைந்த காலைத் தூக்கிச் சுற்றி அசைத்து, முன்னால் வைத்து நடப்பான்! எனவே:- இது நரம்பு நோய்!

ஆனால், மனநோயால் பக்கவாதம் கொண்டவன் கால் பூராவுமே இயங்காமல் போவதால் இடுப்பிலிருந்து விரல் வரை மரக்கட்டையைத் தூக்கி வைப்பதைப் போல் ஒரே அடியாகத் தூக்கி வைப்பான்.

மனநோய்க்கும், நரம்பு நோய்க்கும் உள்ள இந்தப் பெரிய வித்தியாசத்தைக் கண்டுபிடித்துக்கூறி, நிரூபித்துக் காட்டிய பெருமை சார்காட்டையே சேரும்.

நரம்புக் கோளாறு இல்லாமல், மனக்கோளாறு காரணமாகவே பலநோய்களின் அறிகுறிகள் நோயாளிகளின் உடம்பில் காணப்படக்கூடும். என்பதைச் சார்க்காட் நேரிடையாகவே நிரூபித்தார்!

'மயக்குதல் அல்லது அறிவைத் துயிலச் செய்தல்' என்ற இப்னாடிச முறையை அவர் இதற்குப் பயன்படுத்தினார். தனது நோயாளிகள், பார்வையாளர்கள் எதிரிலேயே ஒரே நேரத்தில் ஐந்துபேர், ஆறுபேர்களை, இப்னாடிச முறையால் மயங்க வைத்தார். அவர்களிடத்தில் கடுமையான நரம்பு நோய்களின் அடையாளங்களை உண்டாக்கினார்.

இவ்வளவையும் சார்காட் செய்து காட்டினாரே. தவிர, எந்த இப்னாடிச முறையால் நோய்களின் அறி குறிகளை நோயாளிகளிடம் உண்டாக்க முடிந்ததோ, அதே

இப்னாடிச முறையால், அந்த நோய்களைச் சுகப்படுத்தவும் முடியும் என்பதை அவரால் ஒப்புக் கொள்ள முடிய வில்லை.

ஏனென்றால், பலவீனமான மனமும், மனநோய் களும் உடையவர்களைத்தான், இப்னாடிச முறையால் மயங்க வைக்கமுடியும் என்று சார்காட் நம்பியதால், சுகப்படுத்த முடியாது என்று எண்ணிவிட்டார்.

'சார்காட்டை ஃப்ராய்டு அவ்வளவு சுலபமாகத் தப்ப விடவில்லை. "மனநோயால் உண்மையான பக்கவாதத் தைப் போன்ற நோயின் அறிகுறிகளே உண்டாவதற்கு என்ன காரணம்? என்று அவர் கேட்டார்!

"மனநோயால் உண்டாகும் பக்கவாதத்திற்குக் காரணம்—ஏதாவது பெரிய அதிர்ச்சியாக இருக்கலாம். அந்த அதிர்ச்சியை நம்மால் உடம்பின் உறுப்புக்களில் பார்க்க முடியாதவையாக இருக்கக்கூடும் என்று சார்காட், ஃப்ராய்டுக்குப் பதில் உரைத்தார்.

இந்த பதில் ஃப்ராய்டுக்கு மனநிறைவைத் தரவில்லை. உடம்பில் காணமுடியாத அதிர்ச்சி, அடி, அல்லது காயம், எப்படி இருக்க முடியும்?

அத்தகைய மர்மமான அடியை உண்டாக்கியது யார்? எதுவாக இருக்கலாம்? அந்த மர்ம அடி உண்டாகக் காரணம் என்ன? என்ற ஃப்ராய்டின் கேள்விகள் மீண்டும் மீண்டும் சார்காட் மனதைச் சேறாக்கி விட்டன.

இந்தக் கேள்விகளுக்குரிய பதில் சார்காட்டிடம் இருந்து வராததால், இதற்கு மேல் அவரிடம் இருந்து தெரிந்து கொள்ள ஒன்றும் இல்லை என்று கண்டு, விடை பெற்றுக் கொண்டு ஃப்ராய்டு அங்கிருந்து புறப்பட்டு விட்டார்.

ஊருக்குத் திரும்பும் வழியில், ஃப்ராய்டு ஹாம்பர்க் நகர் வந்தார்! அங்கு தனக்காகக் காத்திருந்த மங்கை மார்த்தாவை திருமணம் செய்துகொண்டார்.

வீயன்னா திரும்பிய ஃப்ராய்டு, அங்கே ஒரு சொந்த மருத்துவமனையைத் துவக்கினார். அவரிடம் பணம் இல்லாக்குறையை, மார்த்தா தனக்குச் சீதனமாகக் கிடைத்தப் பணத்தால் போக்கினார்.

நரம்பியல் நிபுணரான அவருக்கு, உண்மையாக உடலில் எவ்வித நோயும் இல்லாமல், ஆனால், உண்மை யான, நோய்களின் அறிகுறிகளோடு வரும் மன நோயாளி களுக்கு எப்படி வைத்தியம் செய்வது? ஏதாவது மருந்துத் தண்ணீரைக் கலக்கிக் கொடுப்பதா? மின் சக்தியால் மருத்துவம் செய்துக் கொள்ளுமாறு கூறுவதா? அவர்களிடம் என்ன சொல்வது? என்ற குழப்பங்கள் அவர் மனதைப் பலவாறு உறுத்தின.

சார்காட்டிடம் கற்ற உண்மைகளைப் ஃப்ராய்டு வியன்னா மருத்துவக் கழகத்தில் எடுத்து விளக்கினார். அப்போது அங்கே கூடியிருந்த டாக்டர்கள் எல்லாம் கொல் லென்று சிரித்தார்கள்.

ஆண்களுக்கு ஹிஸ்டீரியாவா? ப்ராய்டு இது ஒரு பைத்தியக் காரத்தனமாகத் தெரியவில்லையா உனக்கு? என்று மீண்டும் அவர்கள் ஆரவாரமாகச் சிரித்தார்கள்.

இது போன்ற நோயாளிகளை 'நானே நேரில் பார்த் தேன்' என்று ஃப்ராய்டு சொன்ன போது, பேராசிரியர் மேனார்ட், அவ்வாறானால் உம்மால் ஆண் ஹிஸ்டீரியாக் களை உண்டாக்கிக் காட்ட முடியுமா? என்று கேலியும் சிரிப்புமாக கைதட்டிக் கொண்டார்!

உடனே சிறு கோபம் கொண்ட ஃப்ராய்டு, தனது பேப்பர்களை கையில் தூக்கிக் கொண்டு "கண்டிப்பாக" உங்கள் முன்னால் காட்டுகிறேன், என்று கூறியபடியே புறப்பட்டார்!

## 4. ஹிப்னாடிசம் சிகிச்சைச் சவாலை ஏற்றுக் குணமாக்கினார்!

வியன்னா பெரிய மருத்துவமனையில் ஹிஸ்டீரியா நோயாளியை டாக்டர் ஒருவர் பார்க்க மறுத்து விட்டார். அவ்வளவு பயம் ஹிஸ்டீரியா என்றால்! அதுவும் ஆணுக்கல்லவா?

ஆனால் ஃப்ராய்டு ஆண் ஹிஸ்டீரியாவைக் கண்டு பிடிக்க அலைந்தார்! இறுதியில், சார்காட் கூறியதைப் போல, கால் முழுவதையும் மரக்கட்டை போல் இடுப்பில் இருந்து தூக்கி வைத்துக் கொண்டு நடந்த ஒரு நோயாளியை அவர் பார்த்தார்.

அவனை வியன்னா மருத்துவக் கழகத்திற்கு அவர் அழைத்து வந்து, இந்த நோயாளியைப் பரிசோதனைச் செய்யுங்கள். உண்மையான பக்கவாத நோய் அவருக்கு இருந்தால் அது எப்படி இருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும் அல்லவா? ஆனால், இது உண்மையான பக்கவாதம் அல்ல; மனநோயால் ஏற்பட்ட பக்கவாதம் என்று ஆளை மருத்துவர்கள் முன்பு நிற்க வைத்தார்.

ஒவ்வொரு டாக்டராக வந்து அந்த நோயாளியைச் சோதனைச் செய்தார்கள். ஃப்ராய்டு சுட்டிக் காட்டிய மாறுபாட்டை உணர்ந்தார்கள். என்றாலும், ஆணுக்கு ஹிஸ்டீரியா நோய் வரும் என்பதை அவர்கள் ஒப்புக் கொள்ள மறுத்து விட்டார்கள்.

கோபம் கொந்தளித்த ஃப்ராய்டு ஆத்திரத்துடன் வியன்னா மருத்துவக் கழகத்தை விட்டு விரிட்டென்று வெளியேறினார்.

இந்த நேரத்தில் சார்காட் மாணவர் டாக்டர் பெர்ன் ஹாம் எழுதிய புத்தகம் ஃப்ராய்டுக்குக் கிடைத்தது. அந்த நூலில் ஹிப்னாடிச முறையில் தன்னுடைய நோயாளி

களைக் குணப்படுத்த முடியும் என்றும், அதன் விவரங்களும் அதில் எழுதப்பட்டிருந்தது.

ஃப்ராய்டு இந்த நூலில் குறித்துள்ளபடி தன்னுடைய நோயாளிகளையும் இப்னாடிசத்தால் குணப்படுத்த முடியுமாம் என்பதைப் பரிசோதனை செய்து பார்த்தார்!

ஃப்ராய்டிடம் வந்த நோயாளிகளுள் சிலரை இப்னாடிசம் முறையால் உறங்க வைத்தார். தங்களை மறந்த மயக்கத்தில் தூங்கும்போது, மீண்டும் அவர்கள் விழித்தார்கள்.

அப்போது அவர்கள் தங்களது நோய்கள் நீங்கிக் குணமடைந்தும், நல்ல சக்தியுடனும், ஆரோக்கியமாகவும் இருப்பார்கள் என்றும்கூறி எழச் செய்தார்.

அவர்கள் உண்மையிலேயே குணமடைந்து விளங்கியது, ஃப்ராய்டுக்கு ஆச்சரியமாகவே இருந்தது. டாக்டர்கள் விடுத்த சவாலை ஏற்றார்! அந்த நோயாளிகளை ஹிப்னாடிசம முறையால் குணமாக்கி அவர் வெற்றி பெற்றார்.

டாக்டர் ப்ருயர் என்பவர், ஃப்ராய்டுடன் படித்தவர்; தனது நோயாளி ஒருத்தியைப் பார்வையிட அவரை அவர் அழைத்துச் சென்றார்.

அந்தப் பெண்ணை ஃப்ராய்டு இப்னாடிசம் முறையால் சிகிச்சை தந்து நோயைக் குணப்படுத்தியதைக் கண்டு ப்ருயர் வியந்து பாராட்டி மகிழ்ந்தார்.

நோயாளியின் வீட்டிலே இருந்து இரண்டு பேரும் திரும்பி வரும்போது; ப்ருயர், 'இதே போலத்தான் என்னுடைய நோயாளி ஒருத்தி பேசிப் பேசியே தன்னைச் சுகப்படுத்திக் கொண்டாள்! என்றார்.

ஃப்ராய்டுக்கு ஒரே ஆச்சரியம்! எப்படி நீர் கூறும் பெண்பேசியே நோயைக் குணப்படுத்திக் கொண்டாள்? என்று கேட்டார். விவரத்தை அந்த டாக்டர் கூறும்போது:

அவள் பெயர் அன்னா ஓ! அழகானவள்! மெலிதந் தோற்றம்; பல மொழி பயின்றவள்; கவிதை எழுதுவாள். இவளுக்கு மிகக் கடுமையான ஹிஸ்டீரியா நோய்!

இப்பெண்ணின் உடலிலே நோயின் அறிகுறி ஏதும் இல்லை; என்றாலும், ஏதோ ஒரு காரணத்தால் அவளது வலது கையைத் தூக்க முடியவில்லை. கை மரத்து, வலு விழந்து, உணர்விழந்துத் தொங்கி விட்டது.

அசைக்க முடியவில்லை; கழுத்தை! ஏதோ பிடித்துக் கொண்டிருப்பது போலத் தோன்றிற்று; இலேசாக அடிக்கடி இருமல்! இப்படி ஒவ்வொன்றாக ஆரம்பித்த மனநோய் அறிகுறிகள், மேலும் மேலும் அதிகமாகிக் கொண்டே போனது.

ஒரு நாள் திடீரென பார்வை மங்கிற்று; எதைப் பார்த்தாலும், இரண்டிரண்டு உருவத்தோற்றமளித்தது. சில நேரங்களில் அடியோடு எதுவும் தெரியாமல் போயிற்று!

பயின்ற பலமொழிகளுள் ஆங்கிலம் ஒன்றைத் தவிர மற்ற எல்லா மொழிகளையும் அவள் மறந்து விட்டாள்! அவளது தாய் மொழி ஜெர்மனி! அதுவே வரவில்லை அவளுக்கு அவ்வளவு அதிகமான மறதி; பாவம்!

டாக்டர் ப்ரூயர், இந்தப் பெண்ணின் நோய்களைக் கவனமாகப் பார்த்தார்; என்ன மருத்துவம் செய்வது என்பது அவருக்குப் புரியவில்லை.

தந்தையிடம் மிகுந்த அன்புடையவள் இவள். இருமல் நோயால் வேதனைப்படும் தனது தந்தையை அருகில் இருந்தே கவனித்துப் பணிவிடை செய்து வந்தாள்.

ஆனால், தந்தை அந்த வியாதியினாலே மாண்டார்; அந்தப் பெண்ணும் அதே நோயாளியானாள். மாலை நேரம் வந்ததோ இல்லையோ அவளுக்கும் தூக்கமும், அதனால் மயக்கமும் தொடர்ந்து வந்துவிடும். தன்னை மறந்தே அவள் தூங்கி விடுவாள்.

அவளுக்கு அந்தத் தூக்கம், மனநோய் சம்பந்தப்பட்ட மயக்கமாக மாறியது. இது போன்ற மயக்க நிலையில் ஒருநாள் இருக்கும்போது, ஐயோ, சித்ரவதை சித்ரவதை என்று அவள் அலறினாள்!

எதிர்பாராமல் அவளது டாக்டர் அங்கு வந்தபோது, இந்தக் காட்சியைக் கண்டார். உன்னைச் சித்ரவதைச் செய்வது யார்? என்று அவளைக் கேட்டார்.

இதுபோன்ற நல்ல தூக்கத்தில் இருப்பவர்களுக்குச் சாதாரணமாக யார் பேசினாலும் எதுவும் கேட்காது. ஆனால், இந்தப் பெண்ணுக்கு டாக்டர் கேட்பது காதில் நன்றாகக் கேட்டது. அவள் அதற்குப் பதில் கூறும்போது, 'மகளே மணி என்ன ஆயிற்று; என்று எனது தகப்பனார் கேட்கிறார்' டாக்டர்' என்றாள்!

அந்தப் பெண் அப்போது கடிகாரத்தைப் பார்த்தாள். கடிகாரம் அவளுக்கு இரண்டு கடிகாரமாகத் தெரிந்தது. மணி பார்க்க முடியாமல் அவள் திணறினாள்.

டாக்டர் அந்தப் பெண்ணின் செயலைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாரே தவிர, என்ன மருத்துவத்தை அவளுக்குச் செய்வது என்று புரியாமல் தவித்தார். ஆனால், அவளது கண்களில் கண்ணீர் மளமள வென்று வழிந்து கொண்டிருந்ததையும் அவர் கண்டார்.

கொஞ்சம் நேரமானதும் அவள் மயக்கம் நீங்கி எழுந்தாள். இப்போது பரவாயில்லை டாக்டர், ஏதோ ஒரு பாரம் மனதைவிட்டு அகன்று விட்டது போல இருக்கிறது. என்று பேசினாள்.

நாட்கள் சில கடந்தன! மறுபடியும் டாக்டர் அவளிடம் வந்தபோது, இப்போது எதையும் என்னால் நன்றாகப் பார்க்க முடிகிறது டாக்டர். எந்தப் பொருளும் இரண்டாகத் தெரியவில்லை. என்றாள்.

டாக்டரும் தினந்தோறும் அவள் அருகே அமர்ந்து அவள் பேசுவதையும் கேட்டார். தனக்கு ஏற்பட்ட ஒவ்வொரு நிகழ்ச்சியையும் அவள் டாக்டரிடம் மனம் திறந்துக் கூறினாள். அவள் நோயும் அவளை விட்டு அது முதல் அகன்று போனது.

பிறகு ஒரு நாள் மீண்டும் மயக்கமானாள். எந்த சம்பவமும் அவள் நினைவுக்கு வரவில்லை. அப்போது டாக்டர் ஹிப்னாடிச முறையால் அவளை மயக்கமடையச் செய்தார் அந்த மயக்கத்தின்போது அவளுக்கு மீண்டும் எல்லா நிகழ்ச்சிகளும் நினைவுக்கு வந்தன.

தனது தந்தையின் பக்கத்தில் ஓர் இரவு அவள் தனது கையை ஊன்றிக் கொண்டு அமர்ந்துள்ளபோது தூங்கி. விட்டாள். அப்போதுஅவளது கை மரத்துப்போய் விட்டது

அவளது தந்தை ஏதோ கேட்டதை எடுத்துக்கொடுக்க முடியாத நிலை. அது முதல் அவள் கை சிறிது சிறிதாக உணர்விழந்து செயலற்றுப் போனது. பிறகு மூச்சுத் திணறலும், இருமலும் உண்டாயிற்று. பிறகு அவள்தொடர்ந்து இரும ஆரம்பித்தாள்.

வேறோர் இரவு அரைத் தூக்கத்தில் அந்தப் பெண் இருந்தபோது, ஒரு கருநாகப்பாம்பு தனது தந்தையை நோக்கி வந்தது. உடனே கூச்சல் போட ஆரம்பித்தாள். ஆனால், அவளுக்கு வாயும், நாவும் ஒத்துழைக்கவில்லை. பேச முடியவில்லை.

அன்று முதல் அவளுக்குத் தெரிந்த எல்லா மொழிகளும் மறந்து போய்விட்டன. ஆங்கிலம் ஒன்றுதான் அவள் நினைவில் நின்றது.

இவ்வாறாக, அவள் இப்னாடிச மயக்கத்தில் இருந்த போது தனது மனதிலுள்ள பாரங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக டாக்டரிடம் இறக்கி வைத்தாள். அன்றிலிருந்து அவளது மனநோய்கள் ஒவ்வொன்றாக நீங்கின.

பழையபடி அவள் எதையும் பேசவும், யார்க்கவும் சக்தி பெற்றாள். கை கால்கள் அசைந்து அவளது உடலும் முன்பிருந்ததுபோல வலுவுடன் செயல் புரிந்தது

இவற்றை எல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த டாக்டர் ஃப்ராய்டு மிகுந்த வியப்பிலாழ்ந்து, இந்த செய்தியை இவ்வளவு காலமாக ஏன் மறைத்து வைத்திருந்தீர்கள்? இது புதிய கண்டுபிடிப்பாயிற்றே! என்று அவரைக் கேட்டார்.

ஒரு நிகழ்ச்சியை வைத்துக் கொண்டு உலகத்தில் பேச முடியாது அல்லவா? என்றார் டாக்டர் ப்ருயர்.

ஃப்ராய்டு இந்தக் கண்டுபிடிப்பைத் தொடர்ந்து தன்னிடம் வரும் நோயாளிகளைக் கவனமாக அதே முறையால் சிகிச்சைச் செய்து கொண்டே இருந்தார்.

## 5. தகாத காமத்தை மறைத்தால்; உடற் கூறுகள் கெட்டே போகும்!

டாக்டர் ஃப்ராய்டுவிடம் இது போன்ற இரண்டு நோயாளிகள் சிக்கினார்கள். அவற்றில் ஒருத்தி குழந்தைகளைக் கண்காணித்து தக்க உதவிகளைச் செய்து பாதுகாக்கும் ஆயா; வேலைக்காரப் பெண்.

அவள் மூக்கில் எப்போதும் நீர் வடிந்து கொண்டே இருக்கும்; சமையல் செய்து கொண்டிருக்கும்போது கரிந்து கொண்டிருக்கும் வாசனையை மட்டுமே அறியும் சக்தி உடையவளே தவிர, வேறு வாசனை எதுவும் உணர முடியாதவள்!

டாக்டர் ஃப்ராய்டு அவளை இப்னாடிச முறையால் மயக்கப்படுத்தி அவளைக் கேட்டபோது, சமையல் வாசனை ஒன்றைத்தான் தன்னால் உணரமுடிகிறது என்றாள்.

ஒருநாள் உணவு செய்து கொண்டிருந்த போது வந்த கடிதத்தைப் பிரிக்கலாமா என்று எண்ணிக் கொண்டிருந்தேன். அப்போது சமையல் பலகாரம் கரிந்து விட்டது. அது முதல் கரிந்துபோகும் வாசனை என்னைப் பற்றிக் கொண்டது என்று-மேலும் விவரமாகக் கூறினாள்.

'கடிதத்தை உடனே பிரிக்க வேண்டியது தானே; அதற்கு என்ன யோசனை? என்றார் டாக்டர்.

'கடிதத்தில் என்ன எழுதப்பட்டிருக்கும் என்று எனக்குத் தெரியும். உடனே ஊருக்கு வா என்று எனது தாயார் எழுதியிருப்பார். அது மரியாதைக்காக மட்டுமே எழுதிய 'கடிதம்' என்றாள்.

'ஏன் யோசித்தாய் கடிதத்தைப் பிரித்துப் பார்க்க? என்றார் டாக்டர்.

வேறு ஒன்றுமில்லை, என் தாயார் எழுதிய கடிதத்தை எப்போதும் அலட்சியப்படுத்தி விடுவேன். இப்போது ஊருக்கே போய் விடலாமா? என்று யோசித்தேன் என்றாள்.

'ஏன்' என்றார் டாக்டர்.

அந்த வேலைக்காரப் பெண் பதில் கூறும்போது, 'இந்த வீட்டில் உள்ள வேலைக்காரர்கள் என்னிடம் தவறான எண்ணத்தோடு பழகுகிறார்கள்' என்றாள்.

முன்பெல்லாம் அவர்கள் அப்படி நடந்து கொண்டது இல்லையா? என்றதற்கு, அவள் 'இல்லை' என்றாள்.

உடனே ஃப்ராய்டு, பெண்ணே, உனது முதலாளி உன்மீது காதல் உணர்ச்சி கொண்டிருக்கிறார். இல்லையா?

அந்தப் பெண் திடுக்கிட்டாள்! பிறகு, 'ஆமாம்' என்றாள். அப்படியானால், முதலில் அதை ஏன் என்னிடம் கூறாமல் மறைத்தாய்? என்றார்.

'அது எனக்கே புரியவில்லை. 'அவர் காதல் நான் தெரிந்தது போல் காட்டிக் கொள்ள விரும்பவில்லை' என்றாள்.

'தெரிந்து கொள்வதில் உனக்கு என்ன நட்டம்? என்றார். 'வேறு என்ன நட்டம்? அவர் என் முதலாளி நான் வேலைக்காரி. என்னைப் பற்றி அவர் அப்படி நினைத்திருப்பாரா? என்ற எண்ணம்தான்' என்றாள்.

வேலைக்காரியின் இந்த எண்ணத்தை டாக்டர் அறிந்து கொள்ள பலநாள் கஷ்டப்பட்டார். இந்தப் பிரச்சனையில் அவள், தன் முதலாளி காதல் விஷயத்தைப் பல நாட்களாக மறைத்து வைத்ததால், அவளுக்கு அது மனநோயாக மாறிவிட்டது.

விரும்பாத ஓர் எண்ணத்தை இப்படி மனதில் மறைத்து வைப்பதை டாக்டர் ஃப்ராய்டு REPRESSION அதாவது 'மனதுக்குள் அடக்குதல்' என்று பெயரிட்டார்.

ஒருமனிதன் தனக்கு அவமானம் என்று நினைக்கும் ஓர் எண்ணத்தை மனதுக்குள் மறைத்து வைக்க என்று எண்ணி விடுகிறார்களோ, அந்த எண்ணம் எப்படியாவது, என்றாவது வேறு ஓர் உருவத்தில் வெளியாகிவிட முடிகிறது. அப்படியும் வெளியாக முடியாவிட்டால் அது மனநோயாக மாறுகிறது என்ற முடிவுக்கு வந்தார்.

எலிசபெத் என்ற ஒரு பெண். அவள் தனது கால்கள் அசைக்கக்கூட முடியாதபடி முடமாகி விட்டவள். பருவப் பெண் அவள். பல டாக்டர்களிடம் சிகிச்சைக்காகச் சென்று ஏராளமாகப் பணத்தைச் செலவழித்தவள்! அதற்குப் பிறகு கடைசியாக ஃப்ராய்டிடம் வந்தாள்.

இறந்து போன தனது அக்காள் பிணம் அருகாமையிலே நின்று கொண்டிருந்தபோது, எதிர்பாராமல் தனது கால்களில் வலி ஏற்பட்டதை அவள் உணர்ந்தாள். அன்றிலிருந்து அவளால் தனது கால்களை அசைக்க முடியாது போயிற்று.

அவளுக்கு சிகிச்சை கொடுத்த டாக்டர்கள் எல்லாம், அதிர்ச்சியால் அவள் கால்கள் அசைக்க முடியாமல் போயிற்று. நாளாகவாக அது சரியாகிவிடும்! அதிர்ச்சி உணர்ச்சி அவளை விட்டு அகன்றதும் மீண்டும் நடப்பாள் என்று கூறிவிட்டார்கள். இப்படி ஓராண்டு ஆகியும் அவள் நடக்கவில்லை.

டாக்டர் ஃப்ராய்டு, அவளை ஹிப்னாடிச முறையால் மயக்கமடையச் செய்தார். உனது அக்காள் இறந்து அவளருகில் நீ நின்றபோது என்ன உணர்ச்சி ஏற்பட்டது உனக்கு என்று அவளைக் கேட்டார்.

மயக்கத்திலிருந்த பெண், துடித்துக்கொண்டே, எனது தமக்கை இறந்தபின் நான் அவளருகே நின்று கொண்டிருந்தபோது, எனது அக்காள் புருஷனை நான் இரண்டாம் தாரமாக மணந்து கொள்ள வேண்டும்' என்ற ஆசை எனது மனதிலே ஏற்பட்டது' என்றாள்.

'இந்த எண்ணத்தை மறந்து விட வேண்டும் என்று நீ கஷ்டப்பட்டாயா? என்ற டாக்டரிடம், ஆம், என் மனோசக்தி அனைத்தையும் பயன்படுத்தி அந்த நினைவை மாற்றி விட முயன்றேன். பிறகு, அதைப் பற்றி நான் நினைக்கவே இல்லை' என்றாள்.

''பிணம் இருக்கும்போதா இந்த எண்ணம் எழ வேண்டும்? அதனால், அப்படியே திகிலடைந்து மரம் போல் மரத்துப்போன மனதோடு நின்று விட்டேன்'' என்று அவள் மயக்கமடைந்த நிலையிலேயே தேம்பித் தேம்பி அழுதாள்.

இப்போது ஃப்ராய்டு மயக்கத்தைக் கலைத்தார்! அவளுக்குத் தேற்றலும், ஆறுதலும் கூறிய பின்பு, இப்போது மயக்கமடைந்த நிலையில் என்னிடம் என்ன பேசினாய்? என்று அவளைக் கேட்டார்.

அந்தப் பெண் தான் முன்பு சொன்னதையே மீண்டும் அதே நினைவில் எல்லா விவரத்தையும் அப்படியே கூறினாள். 'சரி மறந்து விடு, வருத்தப்படாதே, போனது போகட்டும் தமக்கை கணவனை மணக்க முடியவில்லை; தோல்வி கண்டுவிட்டாய். இப்படிப்பட்ட ஆசைகள் ஒரு பெண்ணுக்கு உண்டாவது சகஜம்தான் என்றார் ப்ஃராய்டு.

டாக்டர், எனது ஆசையில் நான் வெற்றி பெறாததால் என்னைக் கோழை என்று நினைக்கிறீர்களா? என்று கண்ணீர் சிந்தியபடியே அந்தப் பெண் கேட்டாள்!

எலிசபெத், கோழைகள் யார் தெரியுமா? அவரவர் ஆசைகளை நேரடியாக எதிர்த்து வெல்ல முடியாதவர்கள் தான் கோழைகள் என்றார்.

அப்படியானால் அந்த ஆசையை எதிர்த்து இப்போது நான் எனது கால்கள் முடமாகி ஊன்றுகோலாக இருக்கிறேன், இதற்குப் பெயர் கோழைதானா? என்றாள்.

அப்போது ப்ஃராய்டு, அவளது ஊன்று கோல்களை வெளியே தூக்கி எறிந்துவிட்டு, இதெல்லாம் ஒரு TEMPTATION அதாவது ஓர் இச்சை; ஆசை!

உள்ளத்திலே உருவான எண்ணங்களுக்குப் பயந்து ஓடி ஒளிய நினைப்பவர்களுக்குத்தான் இந்த ஊன்று கோலகள் தேவை. உனது எண்ணத்தை நீ தைரியமாக வெளியே சொல்லிவிட்டாய்; அருவருக்கத்தக்க அந்த நினைவை மறைத்து வைத்துக் கொண்டு நீ மனதைக் குழப்பவில்லை; இனி உனக்கு வெற்றிதான்; பயப்படாதே' என்று அவளுக்குத் தைரியமளித்தார் டாக்டர்!

அந்தப் பெண் தனது எண்ணத்தை மூளையிலே இருந்து அப்புறப்படுத்தி விட்டாள். அதனால் ப்ராய்டு அவளைப் பார்த்து, இனிமேல் நீ அந்த எண்ணத்திற்காக வருந்தாதே; தகாத எண்ணத்தை உண்டாக்கிய உன் மன தின் குற்றத்தை நீ மன்னித்து விட்டாய். இனிமேல் நீ நன்றாக நடப்பாய்; கால்கள் அசைவு முன்பு போலவே அமையும்' என்றார்.

இவ்வாறு ஃப்ராய்டு அவளது மனத்தை தைரியமாக இருக்கத் தூண்டிவிட்டுவிட்டார். அதனால் நடக்கும் சக்தி யை அவள் மீண்டும் பெற்றுவிட்டாள்.

அவளது மனதில் அந்த முடியாத தீயஎண்ணம் மறைந்து கிடந்தவரைதான். அவளை முடமாக்கி வைத்திருக்கும் சக்தியை உடையதாக இருந்தது. அந்த எண்ணம் வெளிப் பட்டு விட்டதும், மனக்கட்டுகள் உடைந்து தாராளமாகி, உடலில் நோய்க்குறிகாட்டும் சக்தியும் நாளடைவில் மறைந்துபோய் விட்டது.

மனநோய்களது பிரிவுணர்ச்சிகளை இவ்வாறு மாமேதை ஃப்ராய்டு, மனிதர் தங்கள் மனதில் உருவான தகாத தீய எண்ணங்களை மனதுக்குள் அடக்கி, அமுக்கி வைக்க முயலுவதால், மனநோய்களுக்கு உள்ளாகிறார்கள் என்ற முடிவைக் கண்டு வெளியிட்டார்.

தீய, தகாத எண்ணங்கள் என்பவை, ஆண்-பெண் பாலுள்ள அல்லது காமம் சம்பந்தமான உணர்ச்சிகளால் உருவானவை என்பதை உணர்ந்தார்.

காதல் சார்பான உணர்ச்சியில்,சமுதாய ஒழுக்கத்திற்கு முரணாக அல்லது தகாத ஒழுகத்திற்கு எதிராக அவர்களது உள்ளம் ஆசை கொள்ளும்போது, மனதுக்குள் ஒழுக்கத்திற் கும் இடையே ஒரு பெரும் மனப்போராட்டமே ஏற்பட்டு விடுகிறது.

இந்தப் போராட்டம்தான் மனிதர்களுக்குள்ளே மன நோயாக புதுப்புது உருவங்களிலே உருவாகித் தொலைத்து அவர்களது வாழ்வையே நாசமாக்கி விடுகின்றது என்பதே உண்மை நிலையாகும்.

இந்த மனநோய் எதிரொலிகள், கை கால்களை முடமாக்கிப் பயன்படாமல் போவதும், திடகாத்திரமான உடல் நலிந்து மெலிந்து அசைவுகளற்று உடல்பாகங்கள் அழுகுவதும், அழிவதுமான நிலைகளைத் தோற்றுவித்து விடுகின்றன.

இந்த நோய்கள் சுகமாவதற்கு அவர்களது ஆசைகள் நிறைவேறியாக வேண்டும் என்ற அவசியமில்லை. அல்லது ஒரு தரம் நிறைவேறி, அது தொடர்ந்து நடக்க வேண்டும் என்ற அவசியமுமில்லை.

அந்த ஆசையை, தைரியமாக, எதிர்த்து நின்று, அதை உணர்வு பூர்வமாக விலக்கிக் கொள்ள, அகற்றிடும் ஆற்றலைப் பெற்றாலே போதும். மனம் தைரியத் திருப்தியை, நிம்மதியை, கட்டறுக்கும் துணிவைப் பெற்றாலே அந்த நோய்கள் தானாக மறைந்து ஓடிவிடும் என்று ஃப்ராய்டு கூறுகிறார்.

மனநோயாளிகள் மனதுக்குள் மறைத்து வைத்துக் கொண்டிருக்கும் தீய எண்ணங்களாலேயே, அந்தநோய்களுக்குப் பலியாகிறார்கள்.

மனநோய் உருவாவது மனதில் பலவீனத்தை ஒருபுறம் அறிவித்தாலும், மற்றோர்புறம் அதுதீய எண்ணங்களின் சக்தியிலே இருந்து அந்த நோயாளி தன்னைத் தற்காத்துக் கொள்ளவும் உதவுகிறது என்கிறார் ஃப்ராய்டு.

ஃப்ராய்டு மற்றொரு மனோ பலத்தையும் அவரது ஆய்வு மூலம் நமக்கு நினைவு படுத்துகிறார். அது என்னவென்றால், மனிதரின் உடல் மாத்திரம் தான் நோய்க்கும்

பலியாகின்றது என்று எண்ணுவது தப்பு. அவனது ஆத்மா வும் நோய்க்கு இரையாகலாம் என்கிறார்.

அதனால் இந்த மன நோய்களுக்குச் சிகிச்சை புரி வோர், உடல் நோயைக் குணப்படுத்திட மருந்து கொடுத் தால் மட்டும் போதாது; ஆத்மாவின் நோய்களையும் சுகப் படுத்திட முயற்சி செய்ய வேண்டும் என்பது அவரது அறிவுரை.

அப்படியானால், மனிதர்கள் எப்படிப்பட்ட எண்ணங் களை மறைக்க முயல்கிறார் என்றால், மற்றவர்கள் எதை ஒழுங்குக்கு உட்பட்டது என்று ஏற்றுள்ளார்களோ, அதற்கு விரோதமான எண்ணங்களைத் தான், மனத்துள் மறைத்து அடக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு உண்டாகிறது. இந்த எண்ணங்கள் ஆண்-பெண் சம்பந்தப்பட்ட பால் உணர்ச்சிகளாகவே இருந்தன.

டாக்டர் ப்ருயரிடம், ஃப்ராய்டு இந்த உண்மைகளை உரைத்த போது, அவர் அதிர்ச்சி அடைந்தார். ஆண்-பெண் இன உணர்ச்சியா? என்று வியந்து கேட்டார். அவர் "பார்த்த அன்னா ஓ" என்ற பெண் பிரச்னையில், பால் உணர்ச்சி சம்பந்தம் இல்லையே என்றார்.

ஆனால், ஃப்ராய்டு இதை மறுத்தார். 'அன்னா ஓ, தன் தகப்பனார் அருகிலே அமர்ந்துள்ள போது தூரத்தில் தன்னைப் போன்ற பருவப் பெண்களும்—வாலியர்களும் ஆடல்-பாடல் கேளிக்கைகளில் ஈடுபட்டிருந்ததை உணர்ந்து வருத்தப்பட வில்லையா? அதில் பால் உணர்ச்சி இல்லையா?' என்று அவர் பதிலளித்தார்.

இந்த தத்துவம் ஒருவருக்கு ஒருவர் டாக்டர்கள் மறுப்பு விவாதமாகவே இருந்தது. முடிவு கிடைக்க வில்லை. ஆனால், இறுதியாக ப்ருயர் அன்னாவின் பிரச் னையை வெளியிட ஒப்புக் கொண்டார்.

உடலில் நோய்க்கான காரணம் இல்லாமல், நோயின் அறிகுறிகளோடு வரும் மனநோயாளிகளைச் சுகப்படுத்த புதிதாக ஒருவழி கண்டு பிடித்ததாகவே ஃப்ராய்டு உணர்ந்தார். ஆனால், அதற்கு முன்னால் இப்படிப்பட்ட நோயாளிகளைக் குணப்படுத்த எந்தவித ஒரு வழியும் இல்லாமலே இருந்தது.

ஏதாவது மருந்துத் தண்ணீரை ஊற்றிக் கொடுப்பது; ஓய்வெடுத்துக் கொள்ளச் செய்வது; மின்சார வைத்தியம் செய்வது போன்ற பித்தலாட்டங்களே இருந்தன. இனி அந்த நம்பிக்கையற்ற முறைகளைப் பின்பற்றிட வேண்டிய நிலைகள் இல்லை என்பதை மட்டும் ஃப்ராய்டு உணர்ந்து கொண்டார்.

மனநோய்களுக்கு அடிப்படைக் காரணம் காதல் உணர்ச்சிதான் என்ற ஃப்ராய்டின் கொள்கையை டாக்டர் ப்ரூயர் மறுத்ததால், இருவரும் மனநோய்களின் ஆராய்ச்சி நூலை" 1893ம்-ஆண்டில் எழுதும்போது, தனித்தனியாக நூலுள்ளே கோட்பாடுகளை எழுதி வெளியிட்டார்கள்.

டாக்டர் ஃப்ராய்டு, மனத்துள், மறைக்கப்பட்ட ஒழுக்க முறைக்குப் புறம்பான தகாத காதல் உணர்ச்சிதான் மனநோய்க்குக் காரணம் என்று தைரியமாக அந்த நூலில் எழுதினார்.

உடலின் பாகங்கள் கெட்டுப் போனபோது அறுவை முறையால் அந்த பாகங்களை அறுத்துச் சோதிப்பதைப் போல், மனதின் பாகங்களை கெட்டு விடுகிறபோது, கெடுதலுக்குக் காரணமான உணர்ச்சிகளை அறுத்து வெளிப்படுத்த வேண்டும் என்று ஃப்ராய்டு எழுதினார்.

மனநோய்க்கு காரணம் வெறும் உடல் மட்டும் அல்ல; அதனுள் ஆத்மாவும் இருக்கிறது. இரண்டின் நோய்களை யுமே மருத்துவத்துறை ஆராய வேண்டும். என்றவர், ஃப்ராய்டு!

## 6. மனத்தடைகளை வெல்க! ஆத்ம பரிசோதனை செய்க!

நோயாளிகளைக் களர்ச்சி மூர்ச்சைக்கும் தூக்க நிலைக்கும் ஆளாக்குவது ஹிப்னாடிசம் என்ற முறை. இப்போது இந்த முறை ஃப்ராய்க்குப் பழக்கமானதாகி விட்டது. ஆனால், எல்லா நோயாளிகளையும் அவரால் சுலபமாக தூங்கவைக்க முடியவில்லை.

இப்னாடிசம் செய்யும்போது வலது கைப் பெரு விரலால் நோயாளியின் நெற்றியை அழுத்திக் கொள்வதால் நோயாளியைச் சுலபமாகத் தூங்க வைக்க முடிந்தது.

இந்த முறையால் நோயாளி சுலபமாகத் தனது உள்ளத்தில் புதைந்து கிடக்கும் நினைவுகளை வெளிப் படுத்தச் செய்யவும் முடிந்தது. அதைவிட, நோயாளியை வசதியாகப் படுக்க வைத்துக் கண்களை மூடிக்கொண்டு, தன் மனதில் தோன்றும் எண்ணங்களை மறைக்காமல், தடுக்காமல், உள்ளதை உள்ளவாறே வெளியிடச் செய்வது மேலும் சுலபமாக இருந்தது.

ஒவ்வொருவரிடமும் கணக்கற்றக் கனவுகளும் எண்ணங்களும், தொடர்பற்ற சிந்தனைகளும் உருவாகிக் கொண்டே இருக்கின்றன. மனம் ஒரு விநாடி கூட அமைதி யாக இருப்பதில்லை எதையாவது செய்து கொண்டே இருக்கிறது.

மனத்தின் இந்தச் செயல்தான் சிந்தனை. அது தூங்கும்போதும் மனத்தின் ஒருபாகம் எதையாவது செய்து கொண்டே இருக்கும். இதுதான் கனவாக மூளை உணர்வது.

மனத்தின் செயல் அதாவது சிந்தனை முழுவதையும் மனிதர்களால் வார்த்தைகளால் வெளிப்படுத்த முடிவ தில்லை. சிலவற்றைக் கூறுகிறார்கள். மற்றவை தன் போக்கில் ஏதாவது செய்து கொண்டே இருக்கின்றது.

ஓடிவரும் ஆற்று வெள்ளத்தின் ஒரு சிறிய பாகம் மக்களுக்கும், விவசாயத்திற்கும் உபயோகம் ஆவதைப் போல, சிந்தனை வெள்ளத்திலும் ஒரு சிறிய பாகம்தான் வெளிப்பட்டுப் பயன்படுகிறது; மற்றபெரும் பாகம் எங்கோ ஓடிக் கொண்டிருக்கின்றது.

இந்த சிந்தனை ஓட்டத்தைத் தடையில்லாமல் ஒரு நோயாளி வெளியிடும்போது, ஒரு நினைவு மற்றொரு நினைவைத் தானாக இழுத்துக் கொண்டு வரத் தொடங்கு கின்றது.

இறுதியில், மனத்தின் அடியில் புதைந்து கிடந்து மனத் துக்கும் உடலுக்கும் கேடு உண்டாக்கிய, அந்த அடக்கப் பட்ட எண்ணங்களும் வெளியாகி விடுகின்றன.

இவ்வாறு ஓடும் எண்ணத்தைத் தடுத்து ஃப்ராய்டு தூண்டிவிடும்போது, "உறங்கு, உடலும் உள்ளமும் தளர் வடையச் செய். முழுமையான ஓய்வு நிலையில் உனது உட லும் உள்ளமும் இருக்கட்டும். உன் மனதில் இப்போது என்ன தோன்றுகின்றது? எது தோன்றினாலும் சரி, எதை யும் மறைக்காமல் உள்ளது உள்ளபடியே கூறு; நீ கூறுவது நியாயமானதா என்று நினைக்காதே; பொருள் உள்ளதா என்று பார்க்காதே; எல்லா எண்ணங்களும் மனிதருக்கு இயற்கையானவையே; உன் எண்ணங்களை மட்டும் அப்படியே சொல்லு; என்ன வேண்டுமானாலும் எண்ணு; ஆனால், அதை மறைக்காமல் கூறு" என்று ஃப்ராய்டு புத்திமதி கூறுகிறார்.

ஆற்றோட்டத்தில் பாறைகள் மறைந்துள்ள இடத்தில் சுழல்கள் ஏற்படவில்லையா? அதைப்போல, உனது சிந்தனை ஓட்டத்திலும் சுழல்கள் ஏற்படலாம்.

அப்போது மனத்தின் அடிப்பாகத்தில் புதைந்துள்ள மர்மம் ஏதோ வெளிவரப்போகிறது என்பதை உணர்ந்து கொள்ளலாம். நோயாளிகள் கூறியதையே திரும்பத்

திருப்பக் கூறும்போது, சொற்களில் குளறுபடிகள் ஏற்படும். அப்போது அவர்கள் விரும்பாத எண்ணங்கள் வெளிப்படும் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இது இடக்பானமுறை! உணர்ச்சிகளை வெளியிடும் முறை! இதைப் ஃப்ராய்டு சட்டுப்பாடற்ற இணக்கம் அதாவது Free Association என்கிறார்.

இந்தக் கட்டுப்பாடற்ற இயக்கத்திற்கு எல்லா நோயாளிகளும் தயாராக இருக்க வில்லை. அவர்கள் மனத்தில் தீய எண்ணங்கள் என்று எதை மறைத்து அடக்கி விட்டார்களோ, அந்த எண்ணம் வெளியாக முயலும் போது, அதைத் தடை செய்ய விரும்பினார்கள். இந்த விருப்பத்திற்கு 'மனத்தடை' அதாவது RESISTANCE என்று ஃப்ராய்டு பெயர் கூறுகிறார்.

கட்டுப்பாடற்ற இணக்கத்தின் வாயிலாக நோயாளிகள் அவர்கள் மனத்தைப் பரிசுத்தப்படுத்திக் கொள்ளும்போது, அவர்கள் அடைந்த குணம் முழுமையாக இருந்தது. புதிய உற்சாகத்தோடு வாழ்க்கையை முன்னோக்கிச் செல்லும் தெம்போடு இருந்தார்கள்.

மனத்தடையால் அவர்களே கட்டுப்படுத்திக் கொள்ளும்போது சங்கடப்பட்டார்கள். தங்களுக்குத் தீமைகளை உண்டாக்கிய உணர்ச்சியை வேரறுத்துக் கொள்ள முடியாத இந்த நோயாளிகள் ஏதாவது காரணங்கள் கூறி தப்பித்துக் கொள்ள முயன்றார்கள்.

சொத்தையாகிப் போன பல்லால் தீராத வேதனையை அனுபவிக்கும் நோயாளி, அதைப் பிடுங்கி எறிய டாக்டர் இடுக்கியை ஏந்தும் போது பயந்து ஓடுவதைப் போல இந்த நோயாளிகளும் நடந்து கொண்டார்கள்.

இந்த மனத் தடையை வென்றுவிடும் நோயாளிகள், உண்மையில் மகத்தான சாதனையைச் சாதித்தவர்கள் ஆகிறார்கள். இதுபோலவே மனத்தடையை வெல்லும்

சக்தி பெற்றவர்கள், தன்னிடம் அளவு கடந்த நம்பிக்கையும், அன்பும் கொண்டதால்தான், அந்த சக்தியைப்பெற முடிந்தது என்பதை ஃப்ராய்டு உணர்ந்தார்.

இப்படி மனத்தடையை வென்றிடும் சக்தி பெற்ற பெண்கள், அவரிடம் ஒரு தந்தையிடம் மகள் காட்டும் அன்பும், பாசமும் உடையவர்களாக மாறிவிட்டார்கள்.

ஆண்களும் அதே அன்பைக் காட்டிய போதிலும், அந்த அன்பு, தந்தைக்கும்-மகனுக்கும் உள்ள அன்பைப் போல் அன்பும்-மாறுபாடும் காட்டுபவர்களாக இருந்தார்கள்.

இது மாதிரி ஒரு புதிய மாறுதலை நோயாளிகளிடம் உண்டாவதை, ஃப்ராய்டு "ஒப்புமை மாற்றம்" அதாவது TRANSFERENCE என்கிறார். தந்தையிடம் கொள்ளும் மன ஒப்புதலை டாக்டரிடமும் கொள்வது தான் நோயாளிகளுக்கும் ஒப்புமை மாற்றமாக அமையும் என்றார்.

இப்போது புதிய ஓர் ஆராய்ச்சியையும் கண்டு பிடித்தார். நோயாளியிடம் திடீரென்று ஏற்பட்டு விட்ட மன அதிர்ச்சியால் மாத்திரம், மன நோய்களுக்கு அவர்கள் பலியாகி விடுவதில்லை. அதற்கான ஆரம்பக் காரணம் நீண்ட காலத்திற்கு முன்பே உருவாகி இருக்க வேண்டும் என்கிறார்.

முன்பு சமையலறையில் நின்று கொண்டிருக்கும் பெண், அவள் தாயாரின் கடிதம்வர, தாயிடம் போவதா அல்லது காதலித்த முதலாளியின் வீட்டிலேயே இருப்பதா என்ற தடுமாற்றத்தில் இருந்த போது, சமையலறைப் பொருள் தீயில் கருகிவிட்டதால், தன் முதலாளியைக் காதலிக்கும் தகாத சிந்தனையை மனத்துள் புதைத்து விட முயன்ற அடிப்படைக் காரணத்தால் அவள் நோயாளியாகி விடவில்லையா?

அதன் காரணம், இன்னும் நீண்ட நாட்களுக்கு முன்னதாக, அவளுடைய குழந்தைப் பருவத்திலேயே உருவாகி இருக்க வேண்டும் என்று அவர் கருதினார்.

அது போலவே, தனது தமக்கையின் பிரேதத்தின் அருகில் நிற்கும் போது அவள் கணவனைத் தான் மணந்து கொள்ள வேண்டும் என்ற அருவருப்பான எண்ணம் உண் டானதால் அவள் நோயாளியாக வில்லை: அதுவும், இன் னும் நீண்ட நாட்களுக்கு முன்பேயே உருவாகி இருக்க வேண்டும் என்று ஃப்ராய்டு நினைத்தார்.

மனிதர்கள் வயதான பின்பு தான் தங்களுடைய எண் ணங்களிலே இருந்து தப்பி விட முயல்கிறார்கள் என்று பொருளல்ல.

குழந்தை பிராயத்திலேயே அந்தக் குணம் ஆரம்பமாகி விடுகிறது. சிறு வயதிலிருந்தே எண்ணங்களை மறைத்து வைக்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

நாளடைவில் அந்த எண்ணம் பழக்கமாகி விடுகின்றது· இவ்வாறு மறைத்து வைக்கும் பழக்கம் பிற்காலத்தில் ஏதா வது ஓர் அற்பக்காரணத்தால், பலமான அதிர்ச்சி அடைந்து விடுகின்றது.

மன இயக்கத்தைப் பரிசோதனை செய்யும் இந்த முறைக்குப் ஃப்ராய்டு, சைக்கோ அனலிசிஸ் அதாவது உளப்பகுப்பு என்கிறார்.

PSYCHE என்ற கிரேக்கச் சொல்லுக்கு ஆத்மா என்று பொருள். சைக்கோ அனலிசிஸ் என்பதற்கு ஆத்ம பரி சோதனை என்று பெயர்.

அதனால் தான் ஃப்ராய்டு மனத்தடைகளை வெல்க! ஆத்ம பரிசோதனை செய்க' என்று மனநோயாளிகளுக்கும் மனநோய் மருத்துவ நிபுணர்களுக்கும் எச்சரிக்கைக் குரல் கொடுத்துள்ளார்.

மாமனிதன் டாக்டர் ஃப்ராய்டுக்குத் திருமணமாகி ஆண்டுகள் ஒன்பது உருண்டோடின. அதன் பலனாக ஆறு குழந்தைகளைப் பெற்றார்கள். மார்ட்டின், ஏர்னஸ்ட், ஆலவர் மூவரும் ஆண்மக்கள். மாநில்டா, சோபீ, அன்னா மூவரும் பெண்மணிகள்.

கடைக்குட்டியும் இளைய பெண்ணுமான அன்னா; தந்தைமேல் அன்புகடந்தபாசமுள்ளவள். அவளிடம் பேசும் போதும், கொஞ்சும்போதும் ஃப்ராய்டு எல்லாக் கவலை களையும் மறந்து, சந்தோஷமாக இருப்பார்.

ஞாயிற்றுக் கிழமைகள் வந்தால் போதும்; உடனே ஃப்ராய்டு தனது தாய் தந்தையர்களைக்கண்டு அளவளாவி அன்று முழுவதும் அவர்களுடன் உரையாடி, பெருமிதம் அடைவார்.

தன் தாயார், தான் ஈன்ற ஆண் குழந்தைகளிடம், தன்னை உட்பட்ட அனைவருக்கும் அளவுக்கு மீறி அன்பு காட்டுவதைப் போலவே, தனது மனைவி தனது ஆண் பிள்ளைகளிடமும் அன்பைப் பொழிகின்றாளே-என்சிந்தித் தார் அவர்.

தாய்மார்களும் தனது பெண் குழந்தைகளிடம் காட்டி டும் அன்பைவிட, ஆண் பிள்ளைகளிடம் அதிகமாகக் காட் டுவது ஏன்? அதுபோலவே, தகப்பனார்களுக்கு தனது பையன்களிடம் காட்டும் பிரியத்தைவிட பெண்பிள்ளை களிடம் அதிகமாக அன்பைப்பொழிவது எதனால் ஃப்ராய்டு யோசிக்கலானார்.

இந்த நேரத்தில் அவர் தந்தை ஜேகப் ஃப்ராய்டு கண் ணில் பார்வைக் கோளாறுக்காக அறுவை சிகிச்சை நடந் தது. அதில் டாக்டர் ஃப்ராய்டு கண்டுபிடித்த கிருமிநாசினி மருந்தை அவரது தந்தையின் அறுவைக்கும் செலுத்தப் பட்டது

தந்தைக்கும் தனயனுக்கும் எப்போதும் புகைச்சல் உறவே தொடர்ந்து வந்தது. எல்லாத் தந்தைமார்களும் தங்களுடைய ஆண்மகன்களைப் பற்றி இவ்வித புகைச்சல் உறவைத்தான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்!

அதுபோலவே, எல்லா மகன்களும் தங்களுடைய தந் தைமார்களைப் பற்றி தான் நினைப்பது போலத்தான் நினைப்பார்கள் என்பதையும் ஃப்ராய்டு புரிந்து கொண் டார்.

வேறு ஒன்றுமில்லை. இதற்குக் காரணம், தாய், ஆண் பிள்ளைகள் மீது அன்பைப் பொழிவதும், தந்தை ஆண் பிள்ளைகள் வாழ்வியல் மீது அக்கறையைப் பொழிவது தான். அது பிள்ளைகளுக்கு நிகழ்கால விரோதமாகி எதிர்காலப் பகையாகி விடுகின்றது. அவ்வளவுதான்! உண்மைகள் உயிராகும் போது எல்லாமே புரிந்துவிடும். இதனால் யாரும், யாருக்கும் விரோதி என்று பொருளல்ல! உறவுப் புகைச்சல்தான்!

ஆனாலும், சில பையன்கள் தகப்பனிடம், ஓர் எதிரியை முறியடித்த போது உண்டாகும். உணர்ச்சி, தன் தந்தையிடமே தனக்கு உண்டாகக் காரணம் என்ன? அவர் சிந்தித்தார்!

இந்த உணர்ச்சி மனிதர்களிடத்தில் சாதாரணமாக, உண்டாகக் கூடியதுதான்; என்றாலும் ஃப்ராய்டு அப்படி எண்ணவில்லை. ஆனால், தன் தாயிடம் தனக்குள்ள அன்பை, தனது மனைவியிடம் கூட காட்ட முடிய வில்லையே, என்ன காரணம் என்று யோசித்தார்.

ஆனால், மார்த்தா ஃப்ராய்டு மீதும், குழந்தைகள் மேலும், வீடு வாசல்கள் துப்புரவிலும், தனது கணவரை நாடி வரும் நோயாளிகளிடமும் அளவு கடந்த அன்பும், சரளமாக பழகுவதும், எப்போதும் சுறுசுறுப்புடனும் காட்சியளித்தபடியே இருப்பதும், ஃப்ராய்டுக்கு ஒரு மனத் தெம்பை அளித்து வந்தது.

## 7. கனவுகளை மனோ தத்துவமாக ஆய்வு செய்த முதல் ஞானி!

நாற்பது வயதைத் தாண்டிய ஒரு மனிதனுக்கு வாழ்க்கையில் திருப்பங்கள் சில ஏற்படுவதுண்டு. இது வரையில் எதனெதன் மீதோ இருந்த ஆசை, குறிக்கோள் நிறைந்த இளமை, வாலிபம் எல்லாம் நழுவி, வாழ்வின் பயங்கரத் தன்மையைப் பழமாக்கும் பருவமான முதுமை,

உற்றம், சுற்றம், மற்றம், அற்றம் எல்லாம் சவுக்கடி கொடுக்கும் பயங்கரம் எதிரில் நிற்கின்றதையும் பார்க்கும் காலமாகும்.

இந்த நாற்பது எல்லோருக்கும் ஒருவிதமான அதிர்ச்சி வைத்தியத்தை உருவாக்கும் காலம். சிலர் இது தெரிந்து தான், எதிர்கால வாழ்வியல் சக்திக்கு வழிதேடிக் கொண் டிருப்பார்கள்! தேடாதவர்கள் கழுதையாக அலைந்து குட்டிச்சுவருக்கும் கதி கெட்டுக் கலங்கி நிற்பார்கள்!

என்ன செய்வது, ஃப்ராய்டுக்கு இப்போது வயது நாற்பத்தொன்று... நோய் வந்தது! என்ன நோய்? கடும் வெப்ப ஜுரமான இன்புறு வென்சா உடல் வலியால் திணறினார்! இருதய நோய் மார்பிலே இடி, இடித்தது!

நட்பும், நாற்பதுக்குமேல் பயன்படாது; அவனவன் வாழ்வையே பார்ப்பான்; அதுவும் குசேலன் குபேரனா னால் பழம் நட்பை நினைப்பானா? நாடுவானா? நிமிர்ந்து தான் பார்ப்பானா? அதுவும் பிச்சை எடுத்தவன் பிள்ளைகள் நிரந்தர வருவாயாளர்களானால் எப்படி இருப்பான் நவீன இருவேளை உணவாளி!

இதற்குப் பிள்ளைகள் மீது குறை கூறமுடியுமா? கையேந்தியவனே கைக்குப் பாதுகை போட ஆரம்பித்தால் எப்படி இருக்கும் புது வாழ்வு? அதுபோல, டாக்டர் ப்ளேஸ் என்ற பெர்லின் நண்பர். உதவி ஏதும் புரியாமல், உபதேசங்களை நோய்ப் படுக்கையாளனான ஃப்ராய்டுக்கு வழங்கினார்! காசு இல்லாமல் கிடைப்பது அறிவுரை தானே!

தனது உடல் பலவீனமடைந்து வருவதுஃப்ராயிடுக்குத் தெரிந்தது. அடிக்கடி மயக்கம்; விபரீத உணர்ச்சிகள்;

விபத்து நினைவுகள் போன்றவை அவரது சிந்தனையைப் பலமாகத் தாக்கின! ஆனால், மனோபலம் அவரைக் கைவிடவில்லை!

நரம்பு சம்பந்தமான நோய்களைக் குணப்படுத்திய டாக்டர் ஃப்ராய்டு, 'நான் தான் என்னுடைய பெரிய நோயாளி" என்று குறிப்பிட்டுக் கொண்டு நண்பர்களுக்குக் கடிதங்கள் எழுதினார்.

அப்போதுதான் ஜேகப் ஃப்ராய்டு திடீர் என்று மரணமடைந்தார். தகப்பனார் சாவு அவரைப் பலமாகத் தாக்கிவிட்டது. ஏனென்றால் ஜேகப்புக்கு இருந்த விஞ்ஞான அறிவும் உணர்வும்தான், ஃப்ராயிடையும் விஞ்ஞானியாக்கி, இவ்வளவு பெரிய புகழையும் பெயரையும் தேடித்தந்தது என்று சொல்லிச் சொல்லி நண்பர்களிடம் அழுதார்; வருத்தப்பட்டார்! அவ்வளவு ஆழமாக தந்தை மரணம் அவரைத் தாக்கிவிட்டது! ஏற்கனவே, நோய்களது தாக்குதல்கள் வேறு!

ஒரு புதிய அனுபவத்துடன் மீண்டும் நோயாளிகளைப் பரிசோதனை செய்திட ஆரம்பித்தார்! என்ன அந்த புதிய அனுபவம்? வேறு ஒன்றுமில்லை, கண்ட கனவுகள்தான்.

தன்னிடம் வந்த நோயாளிகளிடம் ஆயிரம் கனவுச் சம்பவங்களைச் சேகரித்தார்! அன்றுவரை மருத்துவத் துறைக்கு கனவுகள் என்றால் என்ன? ஏதாவது அவற்றால் உண்டா பயன்? என்றெல்லாம் கனவுகூட கண்டதில்லை; எண்ணிப்பார்த்ததே இல்லை. கற்பனைகள் செய்ததுகூட இல்லை.

உலகத்திலேயே கனவுகளைப் பற்றி மனோதத்துவ முறையில், மருத்துவத் துறையில் ஆராய்ச்சி செய்தவர் ஃப்ராய்டு ஒருவர்தான். அவர் கனவுகளை மனோதத்துவ முறையில் அணுகி, 'கனவுகளின் உட்பொருள் விளக்கம்

என்ற நூலையே எழுதி உலகுக்கு முதன் முதல் வழங்கிய வரும் அவர் ஒருவர்தான்! இந்த நூல் 1900-ம் ஆண்டில் வெளிவந்தது!

நோய்களுக்குக் காரணமான கிருமிகளைக் கண்டு பிடித்து (பாக்டீரியாக்களை) உலகுக்கு உணர்த்தியதுபோல நோய்களுக்குக் காரணமான உணர்ச்சிகளை, அவை கனவு களின் மூலமாக, மறைமுகமாக எப்படி வெளியாகின்றன என்று ஃப்ராய்டு எழுதிய நூல் விளக்கிக் கூறுகின்றது.

இந்த நூல் உலகில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத் தும் என்று நம்பிய ஃப்ராய்டு, இந்த நூலுக்குரிய புகழை நான் பெறாமலே இறந்து போவேன்" என்று வருத்தம் தோய்ந்த நிலையிலே நண்பர்களுடன் கடிதம் மூலம் உரை யாடினார்.

இந்த புத்தகம் எழுதியதால் என்ன அவருக்கு லாபம் என்றால், தனது உள்மனதிலே இருந்த எல்லாவிதமான, அதாவது இனம்புரியா பயம், மயக்கம் வரும் பிரமைத் தன்மை, போன்ற ஒடி பஸ் காம்ப்ளக்சுகள் மறைந்தன. அவர் எந்தவித மனநோயும் அற்றவரானார்!

ஒருவனுடைய மனதுள்ஒடுங்கிக் கிடக்கும் உள்ளுணர்வு கள், மனவிகாரங்கள், நோய்களாகும். உணர்ச்சிகள் எல் லாம் ஒருவரிடம் வாய் திறந்து கூறி அமைதி பெற்று விட் டாலோ அல்லது மனதை விட்டு நூலாக எழுதிவிட்டாலோ மனம் ஆரோக்கியம் அடையும்.

டாக்டர் ஃப்ராய்டு மனநோளிகளுக்குக் கொடுத்த மருந்தும், சிகிச்சை முறையும் இதுதான். இதனால் அவரது உள்ளுணர்வுகளை எழுதிய புத்தகத்துள்ளேயே கொட்டி விட்டதால், அவரது மனநோய்கள் எல்லாமே அவரைவிட்டு அகன்றுவிட்டன.

ஒரு சிறுவன் ஒரு நாள் ஃப்ராய்டைப் பார்க்க வந்தான்! ரொட்டித் துண்டு ஒன்றைக் கொண்டு வந்தான். அப்போது அவனது அப்பாவுக்கும் அவனுக்கும் நடந்த சண்டைச் சச்ரவுகளைக் கூறிக்கொண்டிருந்தான். ஆனால், தன்னை அறியாமலேயே அந்த பொம்மையின் கழுத்தைத் திருகிப் பிய்த்து விட்டான்.

ஃப்ராய்டு இதை உற்று நோக்கினார்! பிறகு அவனிடம் உன் தந்தைக்கும் உனக்கும் இவ்வளவு கோபமா? அது இப்போது புரிந்து விட்டதே' என்றார்!

மற்றொரு நேரம் ஒரு பெண் ஃப்ராய்டிடம் பேசிக் கொண்டிருந்தபோது, என் கணவன் என்பதற்குப் பதிலாக என் அப்பா: என் அப்பா என்று சொல்லிக் கொண்டே வந்தாள்.

உங்களுடைய கணவனைப்பற்றி பேசும்போது எல்லாம் 'தவறுதலாக எங்க அப்பா என்று சொல்லி விடுவது வழக்கமா? என்று ஃப்ராய்டு கேட்டார். அவளும் ஆமாம்; அடிக்கடி இந்த தவறு ஏற்பட்டு விடுகிறது என்றாள் அவள்.

அளவற்ற அன்புடன் வளர்க்கப்பட்ட தந்தையின் பாசத்தைக் கணவனிடம் எதிர்பார்த்த அந்தப் பெண் அவனிடம் அது கிடைக்காமையால் ஏமாற்றம் அடைந்ததின் எதிரொலியே அவளுடைய மனநோய்க்குக் காரணம் என்பதை ஃப்ராய்டு புரிந்தார்.

மற்றோர் சமயம் வேறோர் பெண் ஃப்ராய்டிடம் சைக்கோ அனலைசிஸ் என்ற மனப்பரிசோதனை சிகிச்சைப் பெற்றுக் கொண்டிருந்தாள் அப்போது கையிலுள்ள பையை பாதியளவு திறப்பதும் மூடுவதுமாக இருந்தாள்!

தனது எண்ணங்களை அவள் முழுமையாக இன்னும் வெளியிடவில்லை என்பதை உணர்ந்த ஃப்ராய்டு, 'உனது மன எண்ணங்களை முழுவதையும் வெளியிடலாமா-வேண்டாமா? என்று இன்னும் நீ முடிவு செய்யவில்லையா? என்று கேட்டார்.

உடனே அவள், பை முழுவதையும் மூடினாள். பிறகு முழுவதுமாகத் திறந்தாள். உங்களிடம் சொல்லக்கூடாது என்று தான் எண்ணினேன். ஆனால், இப்போது கூறிவிடுகின்றேன் என்று தன்னைத் துன்புறுத்தும் ஆபாசக் கனவு சம்பவங்களை விளக்கிக் கூறினாள்.

நோயாளிகள் தன்னிடம் வரும்போது செய்யும் செயல்களை அவர் கூர்ந்து பார்ப்பார். அவர்களது ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொரு ஆழமான மனோதத்துவப் பொருளுண்டு என்பதைக் கண்டார்.

ஒருவனது வாழ்க்கையில் நடக்கும் தற்செயல் சம்பவங்கள், அஞ்சலத்தில் தபாலைப் போட மறப்பது; குடையை மறந்து விட்டு விடுவது; கால் தடுக்கி கொள்வது, சில பெயர்களும், ஊர்களும் நினைவுக்கு வராமல் தகராறு செய்வது; வாய் குளறி வார்த்தைகள் மாறுவது போன்ற எல்லாச் செயல் கட்டும் ஏதாவது ஒரு மனோ தத்துவக் காரணம் இருக்கத்தான் செய்கின்றது என்று ஃப்ராய்டு தனது கனவு நூலிலே எழுதினார்.

பெயர் மறந்து போவது, ஒரு வார்த்தைக்குப் பதில் வேறு வார்த்தையை எழுதி விடுவது; முகவரி மாற்றி எழுதி விடுவது, இவற்றிற்கும் கூட ஏதாவது ஒரு மனோதத்துவக் காரணம் இருக்கின்றது.

எதையுமே நாம் தற்செயலாகச் செய்து விடுவதில்லை; தவறாகவோ மறதியாகவோ நாம் செய்து விடும் சிறு காரியங்கள் கூட, ஏதாவது ஓர் அடிப்படைக் காரியத்தின் மீதுதான் நடக்கின்றன என்று ஃப்ராய்டு எழுதினார்.

ஒரு டாக்டர் ஒருவனுடைய நாடியைப் பிடித்துப் பார்ப்பதன் வாயிலாக—நோயை அறிவதைப் போல, நரம்பு சம்பந்தப்பட்ட நோய்களைச் சோதிக்கும் போது மனோதத்துவ நிபுணரும் தனது நோயாளிகளினுடைய கனவுகள், நினைவுகள், அவர்கள் செய்யும் தற்செயல்களை

இவற்றிலிருந்து அவர்களது உள்ளப்போராட்டத்தையும் கெடுதிகளை உண்டாக்கும் நினைவின் தன்மைகளையும் உணர்ந்து கொள்ளலாம் என்று டாக்டர் ஃப்ராய்டுதான் உலகில் முதன் முதலில் கண்டு பிடித்துக் கூறினார்.

தினந்தோறும் நடைபெறும் தன்னை அறியாத செயல்களில் இருந்து மனநோய்களை அறிந்து கொள்ளும் முறைகளைப் பற்றி ஃப்ராய்டு செய்த தமது ஆராய்ச்சிகளை எல்லாம் நூலாக வெளியிட்டார்.

அந்தப் புத்தகத்திற்கு 'அன்றாட வாழ்வின் ஆத்மார்த்த மனநோய்களின் அறிகுறிகள்" என்று பெயர் சூட்டினார். இந்த நூலும் வெளியானது. அவர் எழுதிய நூல்களை எல்லாம் பத்திரிகைகளுக்கு விமர்சனத்துக்காக அனுப்பியிருந்தும்கூட எல்லாப் பத்திரிகைகளுமே அலட்சியம் செய்து விட்டன.

மனநோய் சம்பந்தமான மருத்துவத்திற்கு உடல் சூட்டை அளந்துரைக்கும் உஷ்ணமானி போன்ற ஃப்ராய்டு நூல்களுக்கு அன்றைய பத்திரிகை உலகம் காட்டிய மரியாதை, மதிப்பு அது. அதற்காக அவர் மனம் குன்றி விடவில்லை!

மறுபடியும் ஓர் அருமையான மருத்துவ நூலை எழுதி வெளியிட்டார்! இதை மருத்துவ உலகத்தால் அலட்சியம் செய்ய இயலவில்லை. ஏனென்றால், அந்நூல் மனித சமுதாயத்தையே ஒரு கலக்கு கலக்கி விட்டது.

டாக்டர் ஃப்ராய்டு என்ற பெயரைக் கூறும்போது உடனுள்ளவர்கள் அக்கம் பக்கம் பார்த்து அச்சப் பட்டார்கள். கேட்கத் தகாத பெயர் என்று அதைக் கேட்டு விட்டப் பெண்கள் முகத்தைச் சுளித்தார்கள். காதுகளைப் பொத்திக் கொண்டார்.

எனவே, அவரது பெயர் பொது இடத்தில் கூறத் தகாத பெயராகி விட்டது. இப்படிப்பட்ட ஒரு திடீர் பரப்பை உண்டாக்கிய அந்தப் புத்தகத்தின் பெயர் என்ன

தெரியுமா? 'ஆண்—பெண் பால் உணர்ச்சிக்கு மூன்று விளக்கங்கள்' என்பதே அந்தப் பெயர்!

அந்த நூலைப் படித்தவர்கள் பயங்கர மனிதன் ஃப்ராய்டு; பைத்தியக்காரன்; என்றெல்லாம் அவரை விமரிசனம் செய்ய வைத்ததே அந்தப் புத்தகம்தான்!

இந்த லட்சணத்தில், வியன்னா பல்கலைக் கழகத்தில் மனோதத்துவப் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த 'வாக்னர்வான் ஜாரெக்' என்பவர் ஃப்ராய்டு எழுதிய நூலைப் படித்துவிட்டு ஒரே வரியில் 'பைத்தியக்காரத் தனம் என்று கூறிவிட்டார்!

இந்தப் பேராசிரியர்தான் பிற்காலத்தில் நோபல் பரிசு பெற்றவர் என்பதை அறிவியல் துறை மறக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

## 8. டாக்டர் ஜங் இல்லையேல் ஃப்ராய்டுக்குப் புகழில்லை!

1902-ம் ஆண்டு! வியன்னா மருத்துவச் சாலை! மருத்துவச் சாரியான கூட்டங்கள் கூடும் இடம்! அந்தக் கூடத்தை வாடகைக்கு எடுத்தார் ஃப்ராய்டு. மனோ தத்துவக் கூட்டங்களை நடத்த ஏற்பாடு! அங்கே ஃப்ராய்டு பேசினார்! கூட்டத்தின் எண்ணிக்கையோ மூன்றே மூன்று பேர்கள்தான்.

வந்தவர்கள் மூன்று பேர்கள்தானே என்று ஃப்ராய்டு மனம் தளரவில்லை; அதனால் அவர் சொல்ல வேண்டியக் கருத்துக்களை ஊனமாக்கவில்லை. வகுப்புக்களை ஒழுங்காக நடத்தி, கூட்டங்களை கூட்டும்படி மனோதத்துவங்களைப் பேசினார்!

நாளாகவாக மூன்றுபேர், முப்பது பேரானார்கள்; மருத்துவம் பயில்வோர் எல்லாம் கருத்து தானம் பெற்றிடத் தினந்தோறும் புதிது புதிதாக வந்துக் கேட்டார்கள்;

இவர்களில் சிலர், வியன்னா பல்கலையில் பயில வேண்டியதை எல்லாம் பயின்று, மேற்கொண்டு புதிய அறிவு ஏதாவது பெற முடியுமா என்று அலையும் அறிவு ஜீவி மாணவர்களாவர்! கூட்டம் நாளடைவில் பெருக ஆரம்பித்தது.

டாக்டர்கள் ரீட்லர், கஹேன், ப்ரிட்ஸ் விட்டல்ஸ், எட்வர்டு ஹிட்ச்மான், ஸாச்ஷ், ஆட்டோ ராங்க், வில்லியம் ஸ்டெகல் இப்படியாக டாக்டர்களது எண்ணிக்கை அதிகரிக்கலாயிற்று.

டாக்டர் ஸ்டெகல் ஃப்ராய்டு கண்டுபிடிப்புகளைப் பற்றிப் பத்திரிகைகளிலே எழுதினார். அவரது வீட்டிலே வாரம் ஒருநாள் வகுப்பு நடத்தப்பட்டது. அவருடைய கருத்துக்களைப் பின்பற்றிட ஒரு குழு உருவானது.

ஒருநாள் பத்திரிகையில் ஃப்ராய்டு பற்றித் தாக்கி எழுதியவருக்கு வேறொருவர் பதில் தாக்கும் எழுதும் கட்டுரை ஒன்று வெளிவந்தது.

அதை எழுதியவர் ஆல்ப்ரெட் என்பவர், அவரை நேரிலே வந்து பார்க்குமாறு ஃப்ராய்டு எழுதிய கடிதத்தைக் கண்டு அவரும் வந்து பார்க்கும்போது, அவர் நரம்பு சம்பந்தமான ஒரு டாக்டர் என்று தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார்.

சுமார் ஐந்தடி உயரமுள்ள அந்த டாக்டர், 'நாம் எல்லோரும் உள்ளும் புறமும் நமக்கு ஏற்பட்டிருக்கும் குறைபாடுகளை வேறு விதத்தில் நிறைவேற்றி நிரப்பிக் கொள்ளப் பார்க்கிறோம் என்றார்.

இப்படிக் கூறிய இந்த டாக்டர் தான் பின்னாளில் ஃப்ராய்டுடன் கருத்து மாறுபட்டு, தன்னைக் குறைத்து மதிப்பிட்டுக் கொள்ளும் 'தாழ்வு மனப்பான்மை' என்ற தத்துவத்தை உண்டாக்கியவர் ஆவார்.

துவக்கக் காலத்திலேயே ஆல்ட்ப்ரரட்டின் மனப் போக்கு வேறு விதமாக இருந்தது. புதிய விஷயங்களைக்கிரகித்துக் கொண்டு தவறைத் திருத்திக் கொள்ளும் மன வளமும் அவரிடம் இல்லை என்பதை ஃப்ராய்டு அறிந்தார். வேறோர் இடத்திலிருந்து இந்த நேரத்தில் அவருக்கு ஓர் ஆதரவு வந்தது. சூரிச் நகரில் புகழ் பெற்று விளங்கிய டாக்டர் பெ்க்கி என்பவரின் மருத்துவ நிலையத்தில் இருந்துதான் அந்த ஆதரவு கிடைத்தது.

இந்த சூரிச் மருத்து நிலையத்தில் உலகத்தின் எல்லா பக்கங்களில் இருந்தும் டாக்டர்கள் வந்து நரம்பு, மனம் சம்பந்தமான நோய்களில் பயிற்சி பெறுவதற்காக வந்து கூடினார்கள்.

இந்த மருத்துவ நிலையத்தின் டாக்டர்களான பேராசிரியர் ப்ளூலரும், டாக்டர் கார்ல் கஸ்டாவ் ஜங் என்பவரும், ஃப்ராய்டினால் எழுதப்பட்ட 'கனவுகளின் உட்பொருளை' ஆய்வு செய்தார்கள். மற்றவர்கள் அனைவரும் அது பயனற்ற குப்பை ஒன்று ஒதுக்கினாலும், இவர்கள் அதிலே பயன் உள்ளது என்று உணர்ந்தார்கள்.

டாக்டர் ஜங் சிறந்த மனோதத்துவ நிபுணர் என்ற பெயர் அப்போது உலகமெங்கும் பரவி இருந்தது. சூரிச் பல் கலைக்கழகத்தில் அவர் பேராசிரியராகவும் பணியாற்றி வருபவர்.

அவர், ஃப்ராயிடின் மருத்துவ நூல் வைத்திய உலகத் தால் இன்னதென்று கண்டுபிடிக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கும் பலநோய்களுக்கு விளக்கம் தரும் ஒரு மருத்துவக் களஞ்சியம் என்று எழுதினார்.

சூரிச்சுக்கு வந்த பல நாட்டு டாக்டர்களுக்கு எல்லாம் ஃப்ராயிடின் சித்தாந்தங்களை சிறப்பாக அறிமுகப்படுத்தி வைத்தார்.

பெர்லினைச் சேர்ந்த டாக்டர் கார்ல் அப்ரஹாம், லண்டன் டாக்டர் எர்னஸ்ட் ஜோன்ஸ், நியூயார்க் டாக்டர் ஏ. ஏ. ப்ரில் எய்டிங்டன் போன்ற டாக்டர்கள் எல்லாம் அந்த நேரத்தில் சூரிச் வந்திருந்தார்கள்.

டாக்டர் ஜங், கனவுகளை எல்லாம் ஒன்று திரட்டினார். ஃப்ராய்டு எழுதிய 'அன்றாட வாழ்க்கையில் ஆத்மார்த்த நோயின் அறிகுறிகள்' என்ற புத்தகத்தை வைத்துக் கொண்டு, குறிப்பிட்டுள்ளபடி தங்களது ஒவ்வொரு செயலுக்கும் ஏதாவது ஒரு மனோதத்துவம் அடிப்படையாக இருக்கிறதா? என்று அவர்கள் ஆராய்ச்சி செய்தார்கள்.

சூரிச்சிலிருந்து வெகு விரைவிலேயே ஆர்வம் உள்ளக் கடிதங்கள் ஃப்ராய்டுவை நோக்கி வந்தன. டாக்டர்கள் ஒவ்வொருவரும் அவரை நேரில் பார்த்து அளவளாவ வியன்னா நகர் நோக்கிச் சென்றனர். எய்டிங்டன், எர்னஸ்ட் ஜோன், கார்ல் அப்ரகாம், ப்ரில் அனைவரும் வந்து ஃப்ராய்டு விடம் மனம் விட்டு விவாதம் செய்தார்கள்.

ஃப்ராய்டுவின் சித்தாந்தம் மருத்துவ உலகத்தில் எப்படிப்பட்ட புரட்சியை உண்டாக்கப் போகிறது என்பதைப் பற்றியும், அவற்றை அவரவர் நாடுகளில் பரவச் செய்யப் போவதாகவும் பேசி வாக்குறுதிகளைத் தந்தார்கள்.

டாக்டர் ஜங்குக்கும், ப்ராய்டுவுக்கும் இடையில் கடிதப் போக்கு வரத்து நடந்தது. ஜங் மருத்துவம் செய்த டாக்டர்கள் எல்லாரும் ஒரு மருத்துவ அணியில் இணைந்து, குறிப்பிட்டத் திட்டப்படி மருத்துவம் செய்வதையும், மருத்துவ ஆராய்ச்சி சம்பந்தமாக முடிவு செய்வதைப் போல உலகம் முழுவதும் உள்ள மனோதத்துவ நிபுணர்களும் கூடி சங்கம் ஒன்று அமைக்க வேண்டும் என்று முடிவு செய்தார்கள்.

பன்னிரண்டு நாடுகளில் இருந்து 1908-ம் ஆண்டில் நாற்பது பேர் கூடினார்கள். பேராசிரியர் ப்ளூலர், ஜங் இருவரும் இந்தப் பணியில் பங்கேற்றார்கள்.

மனோதத்துவ நிபுணர்கள் இவ்வாறு கூடியது ஃப்ராய்டின் பழைய மாணவர்களான டாக்டர்களுக்குப் பிடிக்கவில்லை. ஃப்ராய்டின் மனோதத்துவ விதிகள் அவர்கள் தங்களுக்குள் பங்கு போட்டுக் கொள்ள நினைத்தார்கள். அது உலகம் முழுவதும் பரவுவது அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

அவ்வாறு பரவுவதாக இருந்தாலும் ஃப்ராய்டின் தத்துவங்களை முதன் முதலாக ஆதரித்தவர்கள் என்ற உரிமையில், தங்கள் மூலமாகத்தான் அது பரவ வேண்டும் என்று எண்ணினார்கள். அந்த டாக்டர்கள் சங்கத்தில் ஜங் செல்வாக்கு அதிகமாக இருப்பது அவர்களுக்குப் பொறமையாக இருந்தது.

இவற்றை எல்லாம் கண்டார் ஃப்ராய்டு. மனோதத்துவ இயக்கம் பலவீனத்தையும், சுட்டிக் காட்டினார் நண்பர்களிடம். இந்த இயக்கம் உலகம் முழுவதும் பரவ வேண்டுமானால், அதற்கு ஏற்கனவே உலகம் முழுவதும் உள்ள புகழ் பெற்றவர்களின் ஆதரவும் தேவை என்பதை விளக்கிக் காட்டினார்.

யூதர் ஒருவரால் கண்டு பிடிக்கப் பட்ட இந்த இயக்கத்திற்கு யூதரே தலைமை தாங்கினால், பைத்தியம் பிடித்த யூதர்களின் இயக்கம் என்ற பழிவந்து சேரும் என்றார்.

மற்றவர்கள் தங்களது கருத்துக்களை ஏற்றுக் கொண்டாலும், யூதர்களின் இயக்கம் என்ற பழியைக் கூறித் தங்களைக் கவிழ்த்து விடுவார்கள், சதி செய்வார்கள் என்பதையும் விரிவாகக் கூறினார். ஃப்ராய்டின் நண்பர்கள் தற்காலிகமாக அவர் கூறியதை ஏற்றுக் கொண்டனர். ஆனாலும் அது நீடிக்க வில்லை.

டாக்டர் ஜங் உழைத்த அருமையான உழைப்பால் ஃப்ராய்டின் பெருமை அமெரிக்கா வரை பரவியது. அமெரிக்காவின் வோர் செஸ்டர் நகரத்தில் உள்ள கிளார்க் பல்கலைக் கழகத்திலிருந்து ஃப்ராய்டுக்கு அழைப்பு வந்தது.

அந்த அழைப்பை ஏற்ற ஃப்ராய்டு டாக்டர் ஜங்குட னும், டாக்டர் பெரன்சியுடனும், அமெரிக்கா சென்றார். நியூயார்க்கிலுள்ள ப்ரில்லும், எர்னஸ்ட் ஜோன்சும் ப்ராயுடன் சேர்ந்துக் கொண்டார்கள். அங்கிருந்து எல்லா ரும் வோர் செஸ்டர் நகர் சென்றார்கள்.

உலக மெங்கிலுமிருந்தும் வந்து அங்கே கூடியிருந்த மனோதத்துவ வித்தகர்கள் முன்னால், ஃப்ராய்டு தமது சித்தாந்தங்களின் உட்பொருட்களை விளக்கிக் கூறினார்.

மூப்பது பேர் முன்னிலையில் அவர் பேசிய தத்துவ வகுப்புக்கு இருந்த எண்ணிக்கையை மீறி, இப்போது பல் லாயிரம் பேர்கூடி ஃப்ராய்டுவின் பேச்சைக் கேட்டுப் பாராட் டும் காலம் கனிந்ததைக் கண்டு அவர் களிப்படைந்தார். ஆனால், அவருக்கு இனிதான் கஷ்டங்கள் ஆரம்பமாகப் போகின்றன என்பது அவருக்குப் புரியாமல் போய் விட்டது.

## 9. ஃப்ராய்டு தத்துவங்களைக் கூறுபோட்ட விஞ்ஞானிகள்!

அமெரிக்காவிலே இருந்து திரும்பி வரும்போது வழி நெடுகவே, ஃப்ராய்டும், ஜங்கும், பெரன்சியும் மனோ தத்துவ வித்தகர்கள் உலகச் சங்கம் அமைப்பது பற்றியே பேசி வந்தார்கள். அதற்கான திட்டங்களை வகுக்கும் வழிகளை அலசிக்கொண்டிருந்தார்கள்.

இந்த உலக தத்துவஞானிகள் சங்கத்திற்கு டாக்டர் ஜங் தலைமை வகிக்க வேண்டும் என்பது ஃப்ராய்டு விருப்பம் இதை டாக்டர் பெரன்சியும் ஆதரித்தார்

ஜெர்மனியிலுள்ள நூரெம்பர்க் என்ற நகரில், கோடைக்காலத்தில் உலக மனோதத்துவ மாநாடு நடந்தது. உலக மனோதத்துவ மேதைகள் பலர் மாநாட்டில் கலந்து கொண்டார்கள்.

வந்தவர்கள் அனைவரும்; உலக சைகோ அனலிடிகல் அசோசியேஷன்" என்ற பெயரில் சங்கத்தை நிறுவ ஒரு மனதாக ஒட்டளித்தார்கள். அந்தச் சங்கம் இன்றும் அதே நகரில் இயங்கி வருகின்றது.

இந்த சங்கத்தின் செயல்களை உலகம் அறிய வேண்டும் என்பதற்காக, 'ஜர்னல் ஆஃப் சைக்கோ அனலிசிஸ்" என்ற மாத பத்திரிக்கையும் அதன் சார்பாக வெளி வந்தது.

ஆனால், இந்த சங்கத்தின் நிலையான ஆயுள்காலத் தலைவராக, டாக்டர் ஜங்கையே நியமிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை டாக்டர் பெரன்சி கொண்டு வந்ததும் மாநாட்டில் குழப்பம் உண்டானது ஃப்ராய்டு வின் பழைய நண்பர்களே இந்த தீர்மானத்தைக் கடுமையாக எதிர்த் தார்கள்.

ஃப்ராய்டு செய்த சமாதானம் எடுபடவில்லை, இறுதி யாக, ஜங் இரண்டாண்டுகள் தலைவராக இருந்தால் போதும் என்று அந்த மாநாடு முடிவு கண்டது. அதற் கேற்ப ஜங் தலைவரானார்.

ஆனால் டாக்டர்கள் ஆட்லர், ஸ்டெகல் போன்ற வர்கள் ஜங் தலைமையைக் காரணம் இல்லாமலேயே பொறாமையும் போட்டி மனப்பான்மையும் கொண்டு அதை எதிர்த்தபடியே இருந்தார்கள்.

ஆட்லர், ஏற்கனவே, தனது தாழ்வு மனப்பான்மை (INFERIORITY COMPLEX) கொள்கையை வற்புறுத்திய படியே, வீயன்னாவில் நடந்த ஒரு மாநாட்டில் ஃப்ராய்டு வின் சித்தாந்தங்களைப் பகிரங்கமாகத் தாக்கினார்! விவாதம் கார சாரமாக நடந்தது.

ஆனால், ஆட்லர் சித்தாந்தத்தில் புதிதாக ஒன்று மில்லை என்றும், ஃப்ராய்டின் சித்தாந்தத்தைத் தவறாக

திசை திருப்புவதாக உள்ளது என்றும், அந்த மாநாடு அவரது தீர்மானத்தை நிராகரித்தது.

இதற்குப் பிறகு, இரண்டாண்டு கழிந்ததும், தனக்குப் பதவி இல்லை என்பதால் டாக்டர் ஜங்கும் ஃபிராய்டுவை விட்டு விலகினார்.

மக்களிடம் இருக்கும் ஆண்—பெண்பால் உணர்ச்சியை அதிகமாக வலியுறுத்த வேண்டியது இல்லையென்றும், அதை விட்டு விட்டால் மக்கள் ஆதரவு தனது மனோதத்துவ ஆய்வுக்குக் கிடைக்கும் என்றும் ஃப்ராய்டு நம்பினார்.

ஆனால், இந்த கொள்கையை விட்டு விட்டால் மனோதத்துவ ஆராய்ச்சியின் அடிப்படையே தகர்ந்துப் போகுமே என்றும் ஃப்ராய்டு கவலைப்பட்டார்.

இந்த கருத்து வேற்றுமையை அடிப்படையாக வைத்துப் பிரிந்து சென்ற டாக்டர் ஜங்கும், தமக்கென்று அனலிடிகல் சைகாலஜி அதாவது 'பகுப்பு உளவியல்' அல்லது 'ஆய்வு மனோ இயல்' என்ற புதிய முறையை உண்டாக்கிக் கொண்டார்.

இவ்வாறு மனோதத்துவ ஞானி ஃப்ராய்டுவை விட்டுப் பிரிந்து போனவர்கள் எல்லாம், ஃப்ராய்டு தத்துவத்துக்கு மாறாக, புதிய எதையும் கண்டு பிடித்தவர்கள் அல்லர்.

அவரது சித்தாந்தங்களைக் கூட்டியும் குறைத்தும்—கூறுபோட்டுக் கொண்டும்-உருமாற்றிக் கொண்டார்களே தவிர, தங்களுடையது என்று அடையாளம் காட்டிக் கொள்ளும் அளவுக்கு ஒன்றுமில்லை.

இந்தத் துரோகிகளின் நம்பிக்கைத் துரோகத்தைக் கண்ட ஃப்ராய்டுவின் மனம் மிகவும் பாதித்தது; ஆனாலும், எதையும் தாங்கும் இதயத்தோடு தொடர்ந்து அவர் போராடலானார்.

மனிதர்கள் யாரும் இன்னும் போதிய அளவு மனப் பக்குவம், பண்பு, நட்புறவின் அருமைகளை அறியாதவர் களாக இருக்கிறார்களே, அவர்களது உள்ளங்களில் இன்னும் மிருக உணர்ச்சிகளே தலை தூக்கி நிற்கின்றதே, என்று ஃப்ராய்டு மிகவும் வேதனையோடு வருந்தினார்! எழுதினார்; போராடினார்.

1914-ம் ஆண்டு! முதல் உலகப் போர் ஆரம்பம்! மக்களிடம் பயம் கொந்தளித்தது! அவ்வளவு விரைவாக மனித இனம் காட்டு மிராண்டித்தனமான போரில் இறங்கி விடும் என்று எவரும் அன்று எதிர்பார்க்க வில்லை!

ஆனால், மனிதனின் மிருக உணர்ச்சி என்றாவது அடக்க முடியாத கோபாவேசமாகக் கொந்தளிக்கும் போது உலகப் போர் மூண்டுதானே தீரும்? மூண்டது போர்! ஃப்ராய்டு குடும்பமும் போரில் இறங்கி விட்டது. ஆனால் ஃப்ராய்டு தனது அலுவலகத்தில் உடல் பூராவும் கம்பளியால் மூடிப் போர்த்துக்கொண்டே அமர்ந்திருந் தார்—பாவம்!

அப்போது தான் ஃப்ராய்டு மனம், மனிதனின் காட்டு மிராண்டித் தனமான உணர்ச்சிகளைப் பற்றிச் சிந்தித்தது! நாகரிகம், பண்பாடுகள் பற்றியெல்லாம் அவர் தீவிரமாக ஆராய முற்பட்டார்!

ஒரு காலத்தில் மனிதன் காடுகளில் அலைந்து திரிந்து வாழ்ந்தான். அவன் உள்ளத்தில் அப்போது விலங்கின உணர்ச்சிகளே குடிகொண்டிருந்தன. இதை "இட்" "ID" என்று பெயரிட்டு ஃப்ராய்டு ஆராய்ந்தார்.

அக்காலத்தில் மனிதனின் உள்ளத்தில் 'இட்' என்னும் காட்டு மிராண்டித்தனம் மட்டுமே இருந்தது. நீண்ட நெடுங் காலத்திற்குப் பின்னால் வனங்களாக இருந்த அந்த உள்ளத்தில் ஒரு சிறிய பகுதி சீர்படுத்தப் பட்டு சுத்தப் பட்டது.

சேர்ந்து வாழ்ந்தால் கோடி நன்மை என்பதற்கு ஏற்ற வாறு மனிதர் நலம் அடையலாம் என்று நம்பியதால் தான் பண்பாட்டுணர்ச்சி தோன்றிற்று.

ஃப்ராய்டு இந்த உணர்ச்சியை ஈகோ Ego என்று பெயரிட்டு அழைத்தார். ஈகோ என்பதை நாம் தமிழில் 'தன் முனைப்பு' அல்லது பண்பாட்டு உணர்ச்சி என்று கூறலாம்.

கூடிவாழ்வதற்காக மனிதன் தனது மிருக உணர்ச்சி களைச் சிறிது சிறிதாக அடக்கிக் கொண்டே வாழ்ந்தான். நாளடைவில் பண்பாட்டு உணர்ச்சி என்ற ஈகோ வளர்ச்சி அடைந்தது.

ஆனாலும், 'இட்' என்ற காட்டு மிராண்டி உணர்ச்சிக் கும், ஈகோ என்ற பண்பாட்டு உணர்ச்சிக்கும் ஏற்பட்ட போராட்டமே இன்று நீத்துக் கொண்டே இருக்கிறது.

'இட்' அடங்கி-ஈகோ வளர்ந்ததால் தான், மனிதனு டைய பண்பாடும் வளரக் காரணமாக இருந்தது. ஆனா லும், இட்டின் சக்தி, விலங்குணர்ச்சி முழுமையாக இன் னும் உலகை விட்டு அழிந்து போகவில்லையே!

மனிதன் மனதில் 'இட்' பாகத்தையும், ஈகோ அடங்கிய பாகத்தையும் ஃப்ராய்டு ஆராய்ந்தார். அவற்றின் தன்மைகளை விளக்கி புத்தகம் எழுதினார்.

அந்தப் புத்தகத்தில், 'இட்' என்ற மிருக உணர்ச்சி நம் எல்லோருடைய உள்ளத்திலும் உள்ளது என்று ஃப்ராய்டு எழுதியுள்ளார்! உண்மைதானே அது, இன்றும் கூட!

1918-ம் ஆண்டு போர் முடிவுற்றது. ஏறக்குறைய 70லட்சம் இளைஞர்கள் போரில் இறந்தார்கள். 180 லட்சம் பேர் தங்களது உடலுறுப்புக்களை இழந்து போனார்கள்— பாவம்!

ஃப்ராய்டு 1923-ம் ஆண்டு தமது ஈத், ஈகோ தத்துவங்களைப் பற்றிய ஆராய்ச்சியை நூலாக வெளியிட்டார். உலகம் இன்றும்கூட போர் அழிவிலே இருந்து விடுபடவில்லை அல்லவா?

இப்போது ஃப்ராய்டுக்கு வயது எழுபது. உலகமெங்கும் இருந்து அவரைப் பார்க்க மக்கள் திரண்டனர். அப்போது மனித இனம் முழுவதுமே 'இட்' உணர்வால் நோய்வாய்ப்பட்டிருந்தது! ஆனால், புகழ்பெற்ற மனிதர்கள் ஆண்களும்—பெண்களுமாக அவரைத் தேடி வந்து கொண்டே இருந்தார்கள்.

எழுபது வயதுள்ள ஃப்ராய்டு, மனிதனின் மனத்தில் உள்ள மிருக, காட்டுமிராண்டித்தன உணர்ச்சிகளைத் தெளிவாக ஆராய்ந்தார்! அதன் கொடுமைக் குணங்களைப் பார்க்கத் தொடங்கினார்.

இப்போது அவர் தனிமனிதர்களின் நோயை மட்டும் பார்க்கவில்லை. உலக சமுதாய, நாகரிகத்திற்கும், பண்பாட்டுக்கும் ஏற்பட்டு விட்ட நோயைத்தான் கவனித்துக் கொண்டிருந்தார்.

## 10. இட்லரின் படைகள் ப்ராய்டு நூற்களை எரித்தன!

போருக்குச் சென்றிருந்த மகன், மருமகன் அனைவரும், பெர்கஸ்ஸ் குடிபிருப்பில் தங்கியிருக்கும் ப்ராய்டின் மகளான அன்னா விட்டிற்கு வந்து ஃப்ராய்டைப் பார்த்து அளவளாவி மகிழ்ந்தார்கள்.

ஃப்ராய்டு மகள் மாதில்டா வியன்னாவில் கணவனுடன் வாழ்ந்து வந்தார். மற்றொரு பெண் சோபி மணமானதும் ஹாம்பர்க் நகரிலே குடியேறியது முதல் அங்கேயே வாழ்ந்து வந்தாள்.

அன்னா என்ற பெண் மட்டும் திருமணமாகாமல் தந்தை ஃப்ராய்டுக்குரிய நலன்களைச் செய்து கொண்டு, கண்ணை இமை காப்பதுபோலத் தனது தாய், தந்தையைப் பாதுகாத்துத் தொண்டு செய்து கொண்டிருந்தாள். ஹாம்பர்க்கிலே இருந்த சோபீ மரணமடைந்ததாக வந்தக் கடிதத்தை ஃப்ராய்டு பார்த்துக் கண்கலங்கிப் போனார். இந்த அதிர்ச்சி அவரைப் பெரிதும் வேதனைப்படுத்தியது.

ஃப்ராய்டின் அருமை நண்பர், இளமைக்காலம் முதல் நெருங்கிப் பழகிய அப்ரஹாம் என்பவர் பெர்லின் நகரில் காலமானார் என்ற செய்தி கிடைத்தபோது, நெருப்பிடைப் பட்ட புழுப்போல் துடிதுடித்தார்!

ஃப்ராய்டுடன் மனோதத்துவ உலகில் நெருங்கிப் பழகிக் கொண்டிருந்த ஹான்ஸ் சாக்ஸ், ஆட்டோ ராங்க் டாக்டர் பெர்ன்லி, எய்டிங்டன், எர்னஸ் ஜோன்ஸ், கார்ல் அப்ரஹாம் ஆகிய ஏழுபேரில் ஒருவரான ஆப்ரஹாம் இறந்தது அவருக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகி விட்டது.

மேரி போனபார்ட், ப்ராய்டு வீட்டிற்கு வரும் போது, அவரது குடும்பத்துக்கு வேண்டிய பொருட்களை எல்லாம் வாங்கி வருவார். அந்த இளவரசி அவருக்குரிய மரியாதை மதிப்புகளை மறந்து ஏதோ பணிப்பெண்போல ஃப்ராய்டு வுக்குத் தொண்டு செய்து. அவரது அறிவாற்றலைப் பாராட்டி மகிழ்வார்.

ஃப்ராய்டு சுருட்டுப் பிடிப்பது வழக்கம். அதனால் அவருக்குப் புற்றுநோய் வந்துவிட்டது. புற்றுநோய் வந்த வாய் தாடைப்பகுதி எலும்பை வெட்டி எறிந்து இரண்டு வாரத்துக்கு ஒருமுறை சென்று தொடர்ந்து சிகிச்சைப் பெற்று வந்தார்.

இந்த நேரத்தில் 1926-ம் ஆண்டு அவரது அன்புக் குரிய தாயார் தனது தொண்ணூறாவது வயதில் மரண

மடைந்தார். அதனால் ஃப்ராய்டு எவரிடமும் பேச முடியாமல் தனக்குள்ளேயே வருந்திக் கண்ணீர் சிந்தினார்!

அவரிடம் மருத்துவம், கலை, கல்வி, பைத்தியக் காரர்கள், குற்றவாளிகள், மனோதத்துவ நோயாளிகள், டாக்டர்கள், கனவுக் குழப்பவாதிகள், ஹிப்னாடிச நோயாளிகள், நிபுணர்கள் என்று இவ்வாறு பலதுறை யினர் வந்து வந்து சிகிச்சைக்குரிய யோசனைகளைப் பெற்றுச் சென்று கொண்டிருந்தார்கள் அவரும் சளைக்கா மல் வந்தவர்களின் மனநிலைக்கு ஏற்றவாறு தொண்டு புரிந்து வந்தார்.

மனிதர்களுக்குரிய நோய்களின் காரணம் கண்டு பிடிக்க உடலைப் பரிசோதிப்பது போல, ஆத்மாவையும் பரிசோ திக்கும் ஃப்ராய்டு சிகிச்சை முறை, அமெரிக்காவில டாக்டர் ஆல்வரஸ் என்பவரால் பரவியது. மக்கள் அதனை வரவேற்றது மட்டுமின்றி, பரிபூரண சுகமும் அடைந்து வந்தார்கள். ஃப்ராய்டு புகழ் அமெரிக்க மருத்துவர்கள் இடையே கொடி கட்டிப்பறக்கலாயிற்று.

இந்த ஆத்ம சோதனைகளால், கிருமிகள், வீக்கங்கள், அழுக்குத் தேங்கல்கள் மட்டும் நோய்களுக்குக் காரணங்கள் அல்ல என்ற எண்ணம், மருத்துவத் துறையில் ஒரு மறு மலர்ச்சியை உருவாக்கியது.

உணர்ச்சி சம்பந்தமான காரணங்களால் எண்ணற்ற வியாதிகள் வரலாம்; தங்கள் மேல் பிறர் பட்சபாதம் காட்ட; தங்களைத் தாங்களே தண்டித்துக் கொள்ள; தங்களது உணர்ச்சிகளால் ஏற்பட்ட விநோதமான நிலை களிலே இருந்து தப்பித்துக் கொள்ள; இப்படிப்பட்ட மேற்கண்ட காரணங்களுக்காகவும் மக்கள் நோயாளிகளாக லாம்!

இவற்றுக்கெல்லாம் டாக்டர் ஃப்ராய்டின் புரட்சிகர மான பல்துறை சிந்தனைகள், தற்காலப் புதுப்புது

மருந்துகளிலும் ஊடுருவி நல்லதோர் மாற்றங்களை உருவாக்கிக் கொடுத்தன என்றால் மிகையாகா.

இதற்கெல்லாம் அடிப்படைக்காரணங்கள் அவர் செய்து நிரூபித்துக் காட்டிய மனோதத்துவ சிந்தனைகளே. ஃப்ராய்டு சிந்தனைகள் அப்போது மனோதத்துவ ஓவியங்களாக சால்வடோர் டாலி போன்ற ஓவியர்களால் வெளி வந்து கொண்டிருந்தன.

ஃப்ராய்டுமனோதத்துவச்சிந்தனைகளைஅப்போதைய புகழ்பெற்ற எழுத்தாளர்கள் எல்லாம் சிறுகதைகளாக, நாவல்களாக, நாடகங்களாக எழுதி இடையே புதியதோர் சிந்தனை மறுமலர்ச்சியை உருவாக்கி வந்தார்கள்.

ஐரிஷ், அமெரிக்கா, ஃபிரான்ஸ், ரஷ்யா, ஸ்பெயின், இத்தாலி. ஜெர்மனி போன்ற நாடுகளிலே உள்ள, ஜேம்ஸ் ஜாய்ஸ், காதரின் மேன்ஸ்பீல்டு, வர்ஜீனியாஷல்ப், டொரோதி ரிச்சரிட்சன் போன்ற எழுத்தாளர்கள் ஃப்ராய்டின் தத்துவங்களைத் தங்களது எழுத்து வடிவங் களுக்கு கருப்பொருட்களாகப் பயன்படுத்தி வெற்றிக் கொடி நாட்டினார்கள்.

டாக்டர் ஃப்ராய்டின் மனோதத்துவச் சிந்தனைகள் கல்வித்துறையிலும் புகுந்தன! இளம் குற்றவாளிகளைத் திருத்தும் உணர்ச்சிகளாகவும் உருவெடுத்தன.

தன்னுடைய மனோதத்துவச் சிந்தனைகளுக்குரிய புதிய புதிய கலைச்சொற்களை ஃப்ராய்டு உருவாக்கி, அவற்றை மக்களும் புரிந்து கொள்ள வேண்டிய சம்பவங் களிலே புகுத்தி ஆட்சி செய்து காட்டினார்.

எந்த வியன்னா நகரம், ஃப்ராய்டின் மனோதத்துவ அருகம்புல்லைக் கிள்ளி எறிய வெட்டுக் கருவிகளை ஏந்தி யதோ, அதே நகரவித்தகர்கள் எல்லாம் ஒன்று கூடி ஒரு பாராட்டு விழாவைப் ஃப்ராய்டுக்கு நடத்திக் காட்டிப் பெருமை பெற்றார்கள்,

'பைத்தியக்காரன் ஃப்ராய்டு' என்று ஏளனம் பேசிய பேராசிரியர் ஜூலியஸ் வாக்னர் ஜாரெக், ஃப்ராய்டு வியன்னா மருத்துவப் பல்கலைக்கழகச் சிறப்புக்குரிய உறுப்பினராக நியமனம் செய்யப்பட்ட விழாவில் அவர் பேசும் போது எப்போதும் பகைவர்களின் அங்கீகாரம் தான் ஆதரவாளர்களின் புகழை விடச்சிறந்தது என்று பாராட்டி மகிழ்ந்தார்.

டாக்டர் ஃப்ராய்டு மிகச்சிறந்த ஓர் உரை நடை எழுத்தாளர் என்பதற்காக, ஜெர்மனி நாடு தனது உயர்வான 'ஏகதே' பரிசைப் ஃப்ராய்டுவுக்கு வழங்கியது.

ஃப்ராய்டு பிறந்த சொந்த நாடான செக்கோஸ்லாவாகியா, அரசு, மிகப்பெரியதோர் பாராட்டு விழாவை அரசு சார்பாக நடத்தி அவரைப் பாராட்டியது.

இப்போது அந்த மாமேதைக்கு வயதுஎண்பது! பாராட்டுக் கடிதங்கள் குன்றுபோல குவிந்தன. அதற்காக வியன்னா நகரம் ஒரு தனித் தபால் நிலையத்தையே திறந்து பணி புரிந்தது.

டாக்டர் ஃப்ராய்டுவைப் பாராட்டிட 1936-ம் ஆண்டு வியன்னாவிலே ஒரு விழா நடந்தது. அந்த விழாவிலே நோபல் பரிசு பெற்ற உலகம் புகழும் எழுத்தாளர் தாமஸ் மான் பேசும் போது: "ஃப்ராய்டு ஒரு புதிய சகாப்தத்தையே உருவாக்கி விட்டார்" என்றார்.

அந்தப் பாராட்டுவிழா கூட்டத்திற்கு கிழவர் ஃப்ராய்டுவால் வர முடியாத வயோதிக நிலை என்பதை அறிந்த 'மான்', அவரது வீட்டிற்கே சென்று தனது பாராட்டு தலைப் படித்துக் காட்டி மகிழ்ந்தார்.

'தாமஸ் மான்', தனது புகழை ஃப்ராய்டு வீட்டில் படித்துக் காட்டிக் கொண்டிருந்த நேரத்தில், போர் வெறியன் இட்லரின் அராஜக நாஜிப் படைகள், அதன் ஆதரவாளர்கள், தெருவெல்லாம் 'ஸ்வஸ்திகா' என்ற அவர்களது இன்னத்தை வரைந்து கொண்டிருந்தார்கள்.

உயர் இனம் என்ற ஜாதி வெறியும், நாடு பிடிக்கும் சர்வாதிகார வெறியும் பிடித்த இட்லரின் நாஜிப்படைகள் அப்போது யூதர் இனத்தவரை எல்லாம் பூண்டோடு அழிக்கும் பணியில் இறங்கி மூர்க்கத்தனமாடிக்கொண்டிருந்தன.

ஜெர்மன் நாட்டு நாஜிகள் ஒன்று கூடி, ஃப்ராய்டினுடைய புத்தகங்களை ஒன்று சேர்த்து அவற்றைப் பறிமுதல் செய்து, நெருப்பு மூட்டி, அந்த தீயில் போட்டு எரித்தார்கள்! வெல்க நாஜிசம்! வீழ்க யூதஇனம் என்ற கோஷத்தோடு எரித்தார்கள். கல்லெல்லாம் உருகிய சிந்தனைக் கருக்கள் நெருப்பில் கரிந்தன-கருகின!

## 11. உலகம் சிந்திய கண்ணீரில் ஃப்ராய்டு பூ மிதந்தது!

ஆண்டு 1938! வசந்த காலம்! இட்லர் படைகள் ஃப்ராய்டு வாழும் வியன்னா நகரைப் பிடித்துக் கொண்டன! அப்போது உலகமே ப்ராய்டின் உயிரைப் பற்றிப் பெரும் கவலையும், பீதியும் கொண்டது.

எர்னஸ்ட் ஜோன்ஸ் என்ற அறிஞர் லண்டனிலே இருந்து பறந்து ஃப்ராய்டைச் சந்தித்தார். உடனே வியன்னா நகரை விட்டுக் குடும்பத்துடன் புறப்படுக லண்டன் போவோம் என்று பதறினார்!

எப்படிப் போவார் ஃப்ராய்டு வியன்னாவை விட்டு, வளமாக வாழ்ந்தநாடு, நகர்! நான்கு தங்கைகளும் வயோதிகமாகி வீட்டோடு உள்ள நிலை! குறிப்பாக எல்லோரும் விதவைகள்!

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அவர்கள் தங்களது அண்ணன் ஃப்ராய்டுவைப் பார்த்துப் பேசி, உண்டு உறங்கி மகிழ்வர்! அவரது மைத்துனி மின்னாவுக்கு கண்பார்வை இல்லை. அவர் பார்வைக்காக ஓர் அறுவைச் சிகிச்சை செய்ய தயாராக உள்ள நேரம்!

ஃப்ராய்டு புற்று நோய்க்காகத் தன் தாடை எலும்பை வெட்டியதால் பதினைந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து செய்து வரும் மாதமிருமுறைச் சிகிச்சையின் தொடர்நிலை புற்று நோய் வளர்ச்சி!

அவரால் நடக்க முடியாததால், தள்ளு வண்டியிலே உட்கார்ந்தவாறே காலத்தைக் கழித்து வரும் சூழ்நிலை. இவற்றுக்கு இடையே சிக்கிய ஃப்ராய்டு, என் ஆஸ்திரியா நாட்டை விட்டு நான் எங்கே போவேன்? இதுதான் என் வீடு' என்று நொந்து கிடந்தார் அவர்!

ஆனாலும், ஒரு தைரியம் அவருக்கு! மடுகிழவனான நடக்க முடியாத, தள்ளாத கிழவனான என்னை-இட்லர் படைகள் ஒன்றும் செய்யா என்று நம்பினார்!

நாஜீகளுக்கு யூதன் இனம்தான் குறிக்கோளே தவிர கிழவனா-குமரனா என்பதல்ல என்பதை அவர்கள் நிரூபிக்கும் வகையில் ஃப்ராய்டு வீட்டை முற்றுகையிட்டுச் சூழ்ந்து கொண்டார்கள்.

ஒரு நாள் ஹிட்லரின் புயல் படையினர், ஃப்ராய்டு வீட்டினுள் புகுந்தனர்! அராஜகம் செய்து வீட்டை நாசமாக்கினர்! 1500 ஷில்லிங் கொடு" என்று மிரட்டிக் கேட்டனர். பாவம் ஃப்ராய்டு, தன்னிடம் இருந்த பணம் முழுவதையும் பயந்தபடியே அவர்களிடம் கொடுத்துவிட்டார்.

ஃப்ரான்சில் அமெரிக்கத் தூதுவராக உள்ள டில்லிட் எஸ்பார் வியன்னா நகர் பறந்தார். இளவரசி மேரி போனபார்ட் ஓடோடி வியன்னா வந்தார். இதற்கிடையில் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் உடனே இட்லருக்குத் தந்தி கொடுத்தார்! அடடா இதுவல்லவா அறிவாபிமானம்? ஃப்ராய்டு விடுதலையா? பெருந்தொகை கொடு என்று நாஜிக்கள் அவரது உயிருக்காகப் போராடியவர்களை எல்லாம் கேட்டார்கள்.

இளவரசி மேரி போனபார்ட், வியன்னா நகர் பாங்குகளில் இருந்த தனது பணம் 25 லட்சம் ஷில்லிங்குகளை ஃப்ராய்டு உயிருக்காக வழங்குகிறேன் என்றார். முடியாது போதாது என்றார்கள் நாஜிகள்! ஆனால், உலகம் முழுவதும் இருந்து வந்த கண்டனங்கள் அந்த வெறி மிருகங்களைப் பணிய வைத்தன! இறுதியாக, 25 லட்சம் ஷில்லிங்குகளை ஏற்று ஃப்ராய்டுவை உடனடியாக நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று உத்தரவிட்டார்கள்.

ஃப்ராய்டு பாரிஸ் வந்தார்! தூதர் டில்லிட், இளவரசி மேரி போனபார்ட் அவரைச் சந்திக்கக் காத்துக் கொண்டிருந்தார்கள். மேரி இளவரசி அவரைத் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று அங்கேயே தங்கிவிட வேண்டினாள். ஃப்ராய்டு மறுத்து அன்றிரவே புறப்பட்டார் லண்டன் மாநகருக்கு.

1939-ம் ஆண்டு! செப்டம்பர் மாதம்! 23-ம் நாள்! உலகப்புகழ் பெற்ற உன்னதமான ஒரு மனோதத்துவ ஞானி மரண தேவியின் காலடியிலே தவழ்ந்து மாண்டார்.

அவரது வயோதிகப் பழயான உடல், கோல்டர்ஸ் க்ரீன் என்ற இடத்தில் எரியூட்டப்பட்டது! அவர் சாம்பல், அவர் சேமித்து வைத்திருந்த பழங்கால ஜாடி ஒன்றில் அடக்கம் செய்யப்பட்டு, பளிங்கு மேடையின் மேல் காட்சிப் பொருளானது.

அந்தக் காட்சிப் பொருள் மீது 'சிக்மண்ட் ப்ராய்டு 1856-1939' என்ற வார்த்தைகள் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

முற்றும்